1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 16-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு வைகாசிமாதம் 1-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## இரு நூற்றாண்டு விழாக்கள்

சென்னை அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய மத்தியாஸ்ஆண்டவரவர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

2. அர்ச். தோமையார் இந்தியாவுக்கு வந்துற்ற 19-ம்நூற்றாண்டு விழாவையொட்டி, எல்லோர் உள்ளங்களிலும்—முக்கியமாகக் கிறீஸ்தவரல்லாத நமது ஹிந்து முஸ்லிம் சகோதரர்களிடையும் அழுத்தமான சிலஉண்மைகளை நாம் பதியச்செய்ய வேண்டும். அதாவது: கிறீஸ்தவம் மேல்நாட்டிலிருந்து கொண்டுவந்து புகுத்தப்பட்ட சரக்கல்ல; தங்கள் தேசியக் கொடியோடு கிறீஸ்துவின்சிலுவைக்கொடியும் பறக்கவிட வேண்டுமெனவிரும்பிய வெளிநாட்டினராலும் புகுத்தப்படவில்லை. போர்த்துக்கேயராலோ, பிரான்சியராலோ, டச்சுக்காரராலோ, ஆங்கிலேயராலோ கிறீஸ்தவம் இந்தியாவில் நாட்டப்படவில்லை. இந்தியாவை அபகரித்தவர்களின் வாள்பலமோ, அல்லது அதை முற்றுகையிட்டவர்களின் ஆயுதபலமோ கிறீஸ்தவத்தைப் புகுத்தவில்லை. இந்திய மண்ணில் தமது இரத்தத்தைச் சிந்திய அந்தமுதல் அப்போஸ்தலரும், வேதபோதகருமான அர்ச். தோமையாருடைய கிறீஸ்துவின் அன்பும், சிலுவைப் பற்றுதலும், அவரைப்பின்பற்றியவர்களின் அன்புத்தொண்டுமே கிறீஸ்தவத்தை இந்நாட்டிற்குவழங்கியது.

3. திருச்சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பகாலத்திலேயே, சுவிஷேஷம் போதிக்கப்பட வேண்டிய நாடுகளில்ஒன்றாகக் கிறீஸ்துபெருமானால் தெரிந்துகொள்ளப்பட்ட பாக்கியத்தைப் பெற்ற இந்நாட்டில்வசிக்கின்ற நாம், நமது மனச்சாட்சியைத் தட்டிக்கேட்போம்.

இந்தியாவிலே சுவிசேஷம் போதிக்கப்பட்டதற்குப் பலநூற்றாண்டுகளுக்குப்பின் அதுபோதிக்கப்பட்டநாடுகளில் கிறீஸ்தவம் எப்படித்துரிதமாக வளர்ச்சியடைந்தது? அந்நாடுகள் ஏன் சீக்கிரத்தில் கிறீஸ்துவின்வசமாயின? 1900 ஆண்டுகளுக்குப் பின்னும் இந்தியாவில் கத்தோலிக்கராகிய நமது எண்ணிக்கை ஏன் இவ்வளவு சிறிதாக இருக்கிறது. பொதுசனத்தொகையோடு ஒப்பிட்டுப்பார்க்குங்கால்?

இந்த ஆமைவேக முன்னேற்றத்திற்குக காரணம் என்ன? நம் பாரதபூமி அப்போஸ்தலர்களில்ஒருவரின் இரத்தத்தைக் குடிக்கவில்லையா? அவ்விரத்தம் போதாதா? இன்னும்அதிகமான இரத்தம் சிந்தப்படவேண்டுமா? ஆனால், சகிப்புநிறைந்த இந்தியாவில் வேதசாட்சிகள் ஓர் விதிவிலக்கே.

நமதுநாட்டின் முதல்கிறீஸ்தவர்கள் ஒருவேளையிலே தாங்கள் பெற்ற பெரும் வரப்பிரசாதத்தை—கடவுளின் பிள்ளைகளாகவும், திருச்சபையின் அங்கத்தினராகவும் ஆனதை—போதுமான அளவு பாராட்டாமல் இருந்துவிட்டார்களோ? அவர்கள் சரியானமுறையில் மதித்துநடந்திருந்தால், றோமாபுரியிலும், மற்றஇடங்களிலும் முதல் கிறீஸ்தவர்கள் செய்ததுபோல, இவர்களும் சிரமப்பட்டு உழைத்துத் தங்கள்சகோதரர்கள்மத்தியில் விசுவாசத்தைநிச்சயமாகப் பரப்பியிருப்பார்கள். ஒரு நன்கொடையைப் பாராட்டுகிறவன், விரும்புகிறவன், அதைமற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதிலும், மற்றவர்களும் தன்னைப்போல் சந்தோஷமாய் இருக்கவேணுமென்பதிலும் கருத்தாகவேஇருப்பான். இதற்குத் தாராளமனதும் ஆத்தும உற்சாகமும் அதிக தேவை. ஒருக்கால், நமதுநாட்டின் முதல்கிறீஸ்தவர்களிடம் இந்தஉற்சாகமும், தாராள நோக்கும் இல்லாது இருந்தனவோ?

எனவே, இந்தியதிருச்சபையின் சரித்திரத்தில் நாம்நினைவுகூரும் இவ்விரு பெரும்வைபவங்களிலுமிருந்து நாம் அடையவேண்டிய முடிபுகளும், பிரதிக்கினைகளும் பின்வருமாறு:—

1. ஒவ்வொரு கிறீஸ்தவனிடமும்அப்போஸ்தலஉணர்ச்சியும், ஆத்துமஉற்சாகமும், தாராள மனசும் அதிகமதிகமாய்ப் புகுத்தி வளர்க்கப்படவேண்டும். ஒவ்வொருகிறீஸ்தவனும், 11-ம் பத்திநாதபாப்பானவர் வற்புறுத்தியதுபோல, அப்போஸ்தலனாக விளங்கித்தான் ஆக வேண்டும். "யேசுவின் ஞானச்சரீரம்பற்றிய போதனையின் முடிபும் இதுதானே! யேசுவின்

## சர்வதேச சற்பிரசாத மகாநாடு

ஸ்பானியதேச பார்சலோனா நகரிலே இந்தவைகாசிமாத இறுதியில் பிரஸ்தாபமாக நடந்தேறவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின்போது அந்நகரிலே மூன்றுலட்சம்மக்கள் சமூகமாயிருப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அந்நகரைச்சுற்றிவர முப்பது மைல் தூரத்துள் யாத்திரிகர்கள் தங்குவதற்குக் கிடைக்கக்கூடிய இடவசதிகளையெல்லாம் அரசினரும் நகரசபைஅதிகாரிகளும் கணக்கெடுத்திருக்கின்றனர். பார்சலோனாநகரிலுள்ள ஹொட்டல்கள், விடுதிச்சாலைகள், பகிரங்க கட்டடங்களையெல்லாம் அரசினர் பொறுப்பேற்றிருக்கின்றனர். பிறநாடுகளிலிருந்து யாத்திரிகர்களை ஏற்றிச்செல்லும் ஏழு பிரயாணக்கப்பல்கள் பார்சலோனாதுறைமுகத்திலே மிதக்கும் ஹொட்டல்களாக நங்கூரமிட்டுநிற்கும். மகாநாட்டின் போது அங்குள்ள நகரசபை ஸ்ரேடியத்திலே பல்வேறுசாதிகளைச்சேர்ந்த ஆயிரம்குருத்துவ மாணவர்கள் கூட்டமாகக் குருத்துவாபிஷேகம் செய்யப்படுவார்கள். பெரும்பாலான ஸ்பானியஜெனறல்கள், அட்மிறல்கள்உட்பட ஸ்பானியபட்டாளங்களின் அதிகாரிகளாய் ஐயாயிரம்பேர்வரையில் மகாநாட்டுக்குச்சமூகமளிப்பார்கள். ஸ்பானியஅரசரும், பட்டாளஇஞ்சினியர்களின் பாதுகாவலருமான அர்ச். பேர்டினன்ட் பரமபதமடைந்த ஏழாம்நூற்றாண்டு ஞாபகார்த்தவிழாவும் மகாநாட்டின்போது கொண்டாடப்படவிருக்கிறது.

### சிறைபுகுந்த அப்பத்துண்டு

மறைவாகச் சிறைச்சாலைக்குள் புகுத்தப்பட்ட ஓர் அப்பத்துண்டைப் பிரயோகித்து, கலம்பியநாட்டைச்சேர்ந்த ஓர் யேசுசபைமிஷனரியான வண. அல்பேட் மாட்டினெஸ் சுவாமியவர்கள் தமது சீனக்கம்யூனிஸ்தகாவலர்கள் காணத்தக்கதாகத் திவ்வியபூசை நிறைவேற்றினார். மறைவாகப்புகுத்தப்பட்ட அந்த அப்பத்துண்டினுள்ளே அவருடையதாயாரின் மரணத்தைத் தெரிவிக்கும் ஒருகடுதாசித்துண்டும் பொதுக்கிவைக்கப்பட்டிருந்தது. அதனால் அந்தத்திவ்விய பூசையை அவர்தமதுமாதாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிறைவேற்றிவைக்கக் கூடியவரானார். பூசைப்பாத்திரமாக வண. மாட்டினெஸ் சுவாமியார் ஓர்சிறிய தேக்கோப்பையை உபயோகித்தார். கொஞ்சம் திராட்சரசமும் சிறைச்சாலைக்குள்மறைவாகப் புகுத்தப்படலாயிற்று. சிறைக்கைதிகளுக்குத் தலையணைகளாக உதவப்பட்ட சிறுமரக்குற்றிகள்கொண்டு அடுத்தார் சித்தஞ்செய்யப்பட்டது. சுவாமியார் கம்யூனிஸ்த சிறைச்சாலையில் நூறுதினங்கள் செலவிட்டபின் சிறையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர் ஹொங்கோங்தீவைப் போய்ச் சேர்ந்தபோது அவருடையதேக்கோப்பைப் பூசைப்பாத்திரமும் அவரதுசாமான்கட்டுள் இருந்தது.

### றோமை விசாரணைப்பங்குகள்

றோமைநகர் மேற்றிராசனம் இன்று 127 விசாரணைப்பங்குகளை அடங்கியிருக்கிறது. சமீபகாலத்திலே மேலும்ஐந்து விசாரணைப்பங்குகளும், இவ்வருட

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

இராசரீகத்தை ஸ்தாபிக்கும் அலுவலில் எல்லோரும்ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். ஏனெனில், எல்லோருமே இவ்வினிய அரசரின் பிரசைகள்........ ஆகவேஅவருக்காக எதுவுமேசெய்யாது ஒதுங்கிக்கொள்ளுகிறவர்கள், செய்யக்கூடியநன்மையைச் செய்யத்தவறிய பாவத்துக்கு ஆளாகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் இது கனமான பாவம்ஆகக்கூடும்" என்று 11-ம் பத்திநாதர் செப அப்போஸ்தல சபையின் தலைவர்களுடன் பேசுகையில் குறிப்பிட்டார். 'ஞானச்சரீரம்' என்னும் நிருபத்தில் 12-ம் பத்திநாதர் சொல்லுகிறார்: "திருச்சபையைத் தங்கள் தாய்என்று அழைக்கும்சகலரும் உருக்கமாய்ச்சிந்திக்கவேண்டிய விஷயம்இது; துறவறவாழ்க்கையைக் கைக்கொண்டுள்ள குருமார் சந்நியாசிகள் மட்டுமல்ல, யேசுவின் ஞானச்சரீரத்தைச் சேர்ந்த மற்றவர்களும் (விசுவாசிகளும்) இச்சரீரத்தைப் போஷித்து வளர்த்து விருத்தியடையச் செய்ய இடைவிடாது உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்."

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### கல்லூரி ஆரம்பம்

ஈஸ்றர்விடுமுறை முடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி இம்மாதம் 5-ந் திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை வழமைபோலஆரம்பமாகும்.

### பாப்பரசரின் பிரதிநிதி

இந்தியாவிலே பாப்பரசர்பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான மகாமேன்மைதங்கிய லேயோ கியர்கெல்ஸ் ஆண்டவர்அவர்கள் இரத்தக்கொதிப்புநோய்கண்டு ஆபத்தானநிலையிலிருந்து படிப்படியாகச் சுகம்பெற்றுத் தற்போது மூன்றுமாதஓய்விலே ஐரோப்பாசெல்லுகின்றார். ஓர்சமயம் இவரிடமாக மற்றோர்பிரதிநிதி நியமனமாகலாமென்று சொல்லப்படுகிறது. இடைக்காலத்திலே வண. றைமொண்டி சுவாமியவர்கள் பிரதிநிதி காரியாலயத்தை நிர்வகித்துவருவார்.

### கல்லூரித் தலைவர்

சம்பத்திரிசியார்கல்லூரித் தலைவரான அதிவண. ரி. எம். எவ். லோங் சுவாமியவர்கள் ஐரோப்பிய, அமெரிக்கநாடுகளில் தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு சென்றதிங்கட்கிழமை சேமமாக யாழ்ப்பாணம் வந்து சேரலாயினர்.

### புதுவை உதவிமேற்றிராணியார்

பார்சலோனாநகரில் நிகழவிருக்கும் சற்பிரசாதமகாநாட்டுக்குப் புதுவை அதிமேற்றிராணியாரின் பிரதிநிதியாக அவரது உதவிமேற்றிராணியாராகிய மகாவண. மாற்கு கோபுஆண்டவர் இம்மாதம் 4-ந் திகதி பம்பாய்த்துறைமுகத்தில் கப்பலேறி அடுத்த 15-ந் திகதி நேப்பிள்ஸ்நகர் போய்ச்சேர்ந்து பின்னர்அங்கிருந்து றோமாபுரிசென்று பரிசுத்தபாப்பரசரைத் தரிசித்தபின் பார்சலோனாநகர்சென்று மகாநாட்டுக்குச் சமுகமளிப்பார்.

### கல்லோயாத் தொகுதிகள்

கல்லோயாப் பள்ளத்தாக்கு நான்கு தொகுதிகளில் பங்குபாகங்களைக் கொண்டிருக்கின்றது. அவற்றில் மூன்று தொகுதிகள் கிழ்மாகாணத்திலும், ஒருதொகுதி ஊவாமாகாணத்திலும் இருக்கின்றது. இன்கினியகலை என்ற அணைக்கட்டுப்பகுதி வத்தளைத் தொகுதியிலும், பாககாசெல்லை, அம்பாரை என்பவன் கல்முனைத்தொகுதியிலும், பொடகொடை, வாலின்னு, மற்றும்குக்கிராமங்கள் பொத்துவில் தொகுதியிலும், அதிகந்தொகையான சனங்களைக்கொண்ட மண்டூர்ப்பகுதி பட்டிருப்புத் தொகுதியிலும் அடங்கியிருக்கின்றன. ஆனால் கல்லோயாப் பள்ளத்தாக்கு முழுவதிலுமுள்ள வாக்காளர் 3,000 பேர் வரையில்தான்.

### ஓர் தோடம்பழத்தால்

மட்டக்களப்பைச்சேர்ந்த சாய்ந்தமருது எனும்கிராமத்தில் இருமுஸ்லீம்கள் போட்டியாக ஓர்தோடம்பழத்துக்கு விலைவைக்கப்போய்க் கடைசியாக இருவரும் ஒருவரோடொருவர் வாக்குவாதப்பட்டுக் கொண்டனர். இந்தவாக்குவாதம் ஈற்றிலே கொலையில் முடிந்தது. அங்கு பக்கிர்வாலாஎனும் முஸ்லீம் ஓர்தோடம்பழம்வாங்க ஒரு கடைக்குச்சென்றான். அப்போது சாமூன்எனும் மற்றோர்முஸ்லீமும் ஓர் தோடம்பழம்வாங்க அதேகடைக்குச் சென்றான். அங்கே ஓர்தோடம்பழத்தின் விலையையிட்டு, அதாவது ஒருவருக்கொருவர் அதன்விலையை ஏற்றிக் கொண்டுபோனதையிட்டுப் பிணக்குப் பட்டுக்கொண்டு இருவரும் தெருவுக்குச்செல்ல, சாமூன் முந்தி ஓடிச் சென்று ஓர்கிறிசைஎடுத்துக்கொண்டு ஓடிவந்து பக்கிர்வாலின் வயிற்றில்குத்திவிடவே, அவன்கடுங்காயமடைந்து, ஆஸ்பத்திரி கொண்டுசெல்லப்பெற்று, சிலமணிநேரத்தின்பின் இறந்துவிட்டதாக விசாரணையில் வெளியாயிற்று.

### மனிலாநகர் அதிமேற்றிராணியார்

பிலிப்பைன்ஸ்நாட்டின் தலைப்பட்டணமாகிய மனிலாநகர் அதிமேற்றிராணியாரான மகாமேன்மைதங்கிய எஜிடியோ வக்னேஸிஆண்டவர் ஓர் கப்பலிலே றோமாபுரிக்குச் செல்லும் வழியில் சென்றவியாழக்கிழமை கொழும்புகண்டுபோகின்றார். றோமாபுரியிலிருந்து இவர் சற்பிரசாதமகாநாட்டுக்குச் சமுகமளிக்குமாறு பார்சலோனாநகர்செல்லுவார். கொழும்பு விக்கார்ஜெனறல் சுவாமியவர்களும், இலங்கைக்கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் தலைவரான பேராசிரியர் டபிள்யு. ஏ. ஈ. கருணாரத்ன அவர்களும் கப்பலுக்குச்சென்று இவரைக் கரைக்கு அழைத்துவந்தார்கள். இவர் 1948-ம் ஆண்டு சுதந்திரவிழாக் கொண்டாட்டத்தின்போது பாப்பரசரின்பிரதிநிதியாக இலங்கையில் சமுகமளித்திருந்தார்.

### பன்னாலைக் கொலைவழக்கு

தெல்லிப்பழையைச்சேர்ந்த பன்னாலையிலே சின்னையா விநாயகமூர்த்தி, கந்தையா வேலாயுதம் எனும்இருவருஞ்சேர்ந்து சென்றபங்குனிமாதம் 11-ந்திகதியன்று பொல்லுகள்கொண்டு தாக்கிச் சுப்பிரமணியம் சோமசுந்தரம்என்பவரைக் கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பெற்றிருந்தவழக்கு மல்லாகநீதிஸ்தலத்தில்நடந்த விசாரணைமுடிவில் சுப்றீங்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறது.

### பாப்பரசரின் மகிமைப்பட்டம்

பரதகுலக் கத்தோலிக்க பிரமுகர்களில்ஒருவரும், சென்னைமந்திரிசபையிலே உணவுமந்திரியாய் இருந்தவரும் சென்னைச்சட்டசபை அங்கத்தவருமான ஸ்ரீ ரோச் விக்ரோறியா அவர்களின் சமூக, சமய, அரசியற் சேவைகளைப்பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அவருக்கு அர்ச். பெரியகிறகோரியாரின் நைற்பட்டம் சன்மானித்திருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம்.

### வைகாசிமாதச் சம்பளம்

இம்மாதம் 24-ந்திகதி தொடங்குகின்ற நான்குநாள் பொதுத்தேர்தல் காரணமாக அரசாங்கஉத்தியோகஸ்தர்களுக்கு வழமையிலும முன்னதாக வைகாசிமாதச் சம்பளம் கொடுபடுமெனத் தெரியவருகிறது. வழமையிலே அவர்கள் மாதம்முடிய ஆறுதினங்களுக்குமுன் சம்பளம் பெறுகின்றார்கள். ஆனால், இந்தமாதம் 20-ந் திகதிவரையில் அவர்களுக்குச் சம்பளம் கொடுபடவிருக்கிறது. இதற்குக்காரணம் அவர்கள் 22-ந்திகதிமுதல் தேர்தல்வேலைகளில் ஈடுபடவிருப்பதேயாகும்.

### செனற்சபை அங்கத்தவர்கள்

பொதுத்தேர்தலிலே கொழும்புநகர் மத்தியதொகுதிக்கு அபேட்சகராகப் போட்டியிட முன்வந்திருக்கும் செனற்றர் சேர் ரஸிக் பரீத் அவர்கள் தமது செனற்றர்பதவியைச் சென்றசனிக்கிழமை இராசினாமாச் செய்திருக்கின்றார். தேர்தலில் அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்ற டக்றர் நாகநாதன், திரு. விஜெசிங்க, மேஜர் தர்மபாலா என்பவர்களும் தங்கள் செனற்றர்பதவியை இராசினாமாச் செய்திருக்கின்றார்கள்.

### புதிய ஒருருபாநோட்டுகள்

இலங்கைமத்தியவங்கி இன்னுஞ்சில நாட்களிலே புதிய ஒருரூபாநோட்டுகளைப் பாவனைக்கு விடவிருக்கிறது. இந்தநோட்டுகள் தற்போது பாவனையிலிருந்துவரும் ஒருரூபா நோட்டுகளைப் பார்க்கிலும் பிரமாணத்தில் சற்றேசிறியனவாய் இருக்கும். புதியநோட்டுகள் பாவனைக்குவந்தபோதிலும் பழைய நோட்டுகளின்பாவனை நின்றுவிடமாட்டாது.

# "கைம்பெண் வளர்த்த கழுதை"

எப்பாடுபட்டாவது தனது கணவனின்உயிரைப் பிடித்துப்போடவேண்டுமென்று தன்வசமிருந்த நகைநட்டுக்களையெல்லாம்விற்று வைத்தியத்திற்குச் செலவிட்டாள் சாந்தி. அவனுக்குக்குடரிலே "கான்சர்" நோய் கண்டிருக்கிறதென்றும், வைத்தியத்திற்கு இடமில்லையென்றும் கொழும்பிலே டக்றர்மார்பரிசோதித்துக் கைவிட்டுவிட்டனர். மதராசுக்குப்போனால் நிச்சயம் குணம்கிடைக்குமெனச் சிலர் சாந்தியிடம் வற்புறுத்தினர். அதன்பேரில் கடைசியாகஎஞ்சியிருந்த ஒரேயொருகாணித்துண்டையும் அவள் விற்றுக்கணவனைமதராசுக்குஅனுப்பினாள். பணம்அழிந்ததேயொழிய குணமெதுவும் உண்டாகவில்லை. அப்பொழுது அவர்களின்ஏகபுதல்வன் குணதாசனுக்கு வயது ஐந்தேஐந்துதான்.

"சாந்தி! குணதாசனைப்பற்றி எவ்வளவோ மனக்கோட்டைகள்கட்டிக் கனவுகண்டுகொண்டிருந்தேன். ஆண்டவன்சித்தம் இப்படிமுடிந்தது. 'கைம்பெண்வளர்த்த கழுதை' என்ற உலகத்தின் வசைமொழியிலிருந்து அவனையும் உன்னையும் ஆண்டவன் காக்கவேண்டும்" என்ற கடைசிமொழிகளுடன் கண்ணைமூடிவிட்டார் குணதாசனின்தந்தை. அவள் கணவனின் கடைசிமொழிகள் சாந்திக்குப் பெருங்கலவரத்தைக் கொடுத்தன. தனது ஒரேயொரு செல்வக்கண்மணியைச் சீராகவளர்த்துத் தீரவேண்டும்; இருவருடையவும் பிற்காலவாழ்வு அதிற்தான் தங்கியுள்ளதென்பதை அவள் மனமாரஉணர்ந்தாள். தன்வாழ்வையும், குணதாசனின்வாழ்வையும் ஆண்டவன்கரத்தில் ஒப்படைத்தாள்.

"திவ்வியஇரட்சகா! என்கணவனின் கடைசிவேண்டுகோளுக்கு மனமிரங்கிக் 'கைம்பெண்வளர்த்த கழுதை' என்னும் கர்ணகடூரமொழியிலிருந்து எங்களைக் காத்துக்கொள்" என்று கண்ணீருடன் வேண்டிக்கொண்டாள். ஏதோ தன்னாலான சிறுபிழைப்புகள்பார்த்துப் பிறர்பல்லுக்குப் பதப்படாமற் தன் காலத்தைக் கழித்துவந்தாள். குணதாசனைப் பாடசாலைக்குஅனுப்பிக் கல்விபயிலவைத்தாள். தினமும் தனது கிராமத்திலுள்ள வியாகுலமாதாவின் கோவில்சென்று குணதாசனைத் தேவஅன்னையின் திருக்கரத்தில் கண்ணீர் பெருக ஒப்படைத்து "வியாகுலத்தாயே! உமதுதிருச்சுதனின் பாடுகளால் தாங்கொணாவேதனைப்பட்ட திருஅன்னையே! உமதுதிருவியாகுலங்களைப்பார்த்து என்மைந்தனைக் காத்துக்கொள்ளும்" என்று பிரார்த்திப்பாள்.

காலச்சக்கரம் உருண்டுகொண்டிருந்தது. சாந்தியின்பிரார்த்தனைகளுக்குப் பரமன் செவிசாய்த்தான் போல் இருந்தது. குணதாசன் தேகவடிவும், ஆன்மசக்தியும்படைத்த அழகனாகவளர்ந்துவந்தான். எவருடனும் அதிகம்பேசமாட்டான். தாயைத் தன் பொக்ஷமாகப் பேணிவந்தான். தெய்வத்திற் பழியைப்போட்டுத் தன்னைவளர்த்துவரும் தாய்க்கு எவ்விதத்திலும் ஆறுதல்அளிக்க வேண்டுமென்பதே அவனது வாழ்க்கையின் லட்சியமாக இருந்தது. கஷ்டப்பட்டுப் படித்து ஓர்ஆசிரியனாகவந்து தன் தாயின் வயோதிபதசையில் அவளைச் சந்தோஷமாகக் காப்பாற்றவேண்டும் என்ற திடசித்தத்துடன் கற்றுவந்தான். அவனது அடக்கத்தையும், அமைதியையும் அவதானித்தபலர் அவன்மேல் அன்புகொண்டனர். "அம்மாசாந்தி! குணதாசன் ஓர்காலம் உன்குறைதீர்ப்பான்" என்ற பிறரின் புகழ்மொழிகள்கேட்டுப் பெருமிதங்கொண்டாள்அன்னையும்.

குணதாசன் தன் 17-வது வயதில் கனிஷ்டபாடசாலைத் தாராதரப்பத்திர ஆரம்பவகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது நடந்தசம்பவம்தான் அவன்வாழ்க்கையை அடியோடுமாற்றிவிட்டது. சாந்தி சிலநாட்களாய்ச் சுரங்கண்டு படுத்திருந்தாள். அது குணமானபோது அவளது கண்பார்வை முன்போலத் தெளிவாயிருக்கவில்லை. வரவரப் பார்வைமங்கலாகிக் கடைசியில் தன்மரக்கறி வியாபாரத்தையே கொண்டுநடத்தமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டாள். இந்நிலையில் குணதாசன் படிப்பைநிறுத்திக் குடும்பஜீவனத்தைத் தேடவேண்டியவனானான். இதையுணர்ந்தசாந்தி "குணம்! என் வாழ்க்கையின் ஒரேயொரு நம்பிக்கையும், ஆறுதலும் நீதான். இதுகாறும் உலகத்தின் காடுமுரடுதெரியாமல் ஆண்டவன் என்சிறகுள்வைத்து உன்னைக்காத்துவந்தார். இனிமேல் எங்கள்ஜீவனத்தைத் தேடும்பொறுப்பு உன்னைச்சார்ந்திருக்கிறது. உன் தந்தை இறக்கும்தறுவாயில் கூறிய கடைசிமொழிகள் இன்னும் என்செவிகளில் தொனித்துக்கொண்டிருக்கின்றன. உலகமோ விஷமம்நிறைந்தது. இனிய கனிகளோடு எட்டிப்பழங்களும் சேர்ந்திருக்கும். காக்காய்ப்பொன்னும்அசல் தங்கத்தைப்போல மின்னும். இவற்றைக்கண்டு ஏமாந்துபோகாதே. சிலுவையே இரட்சணியத்தின் ஊற்று என்பதை மறந்துபோகாதே. தூர்த்தன், கயவன்என்ற கடும்பதங்கள் என்று என்காதில் விழுந்தனவோ அன்றே என்வாழ்வின் ஒளி அணைந்தது என்று நினைத்துக்கொள். வாழ்வில்

செல்வி திரேஸ் தங்கமலர்
சில்லாலை, பண்டத்தெருப்பு.

உன்கஷ்டநஷ்டங்களையும், துன்பதுயரங்களையும் அந்தவியாகுலத்தாயிடம் ஒப்படைத்து அவள்அடைக்கலத்தில் ஒளிந்துகொள். வேறுநான்சொல்வதற்கு என்னஇருக்கிறது மகனே!" என்று அவனைக்கட்டிமுத்தமிட்டாள்.

சாந்தி மரக்கறிவியாபாரம்செய்துவந்தபோது பொலிஸ்இன்ஸ்பெக்றர் ரூபநாதன்வீட்டுக்கும் காய்கறி கொடுத்துவந்தாள். அவளது நறுக்கானபோக்கினாலும், நேர்மையான வியாபாரத்தினாலும் இன்ஸ்பெக்றரது நல்மதிப்புக்குப் பாத்திரமானாள். சாந்தி தன்நிலைமையை அவரிடம் எடுத்துரைத்தபோது, அவர் குணதாசனைத் தானேவேலைக்கமர்த்திக் கொள்வதாக ஒப்புக்கொண்டார். அவனுக்கு மோட்டார்தச் சாரதித்தொழிலைப்பழக்கித் தம்முடையசாரதியாக வைத்துக்கொள்வது அவரதுஉத்தேசம். அவனது அடக்கமும், அமைதியும், நாசுக்கான போக்குவாக்கும் ரூபநாதனுக்குத் திருப்தியைக்கொடுத்தன. தன்விவேகத்திறமையினாலும், புத்திசாதுரியத்தினாலும் குணதாசன் சீக்கிரமே சாரதித்தொழிலிற் தேர்ச்சிபெற்றான். இன்ஸ்பெக்றர் கந்தோர்க்காரியமாயிருக்கையில் அவரது ஏகபுத்திரிரூபாவை அவள் செல்ல வேண்டியஇடங்களுக்குக் கொண்டுசெல்வான்.

ரூபா தன்பெயருக்கேற்ற ரூபவதி. நாகரீகநதியில் தன்இஷ்டப்படி நீந்தி விளையாடுபவள். திரைப்படங்கள் அவளது திவ்வியசேத்திரங்கள். காதற் சஞ்சிகைகளும், நாவல்களும் அவளது செல்வக்களஞ்சியங்கள். கடவுள்—கோயில் — இவைகள் அவள்கனவிற் காணும் காட்சிகள்தான். பெயரளவில் மாத்திரம் கிறீஸ்தவளாயிருந்தாள். பணமும், செல்வாக்கும்படைத்த செல்வக்குடும்பத்தில் ஏகபுத்திரியாகப்பிறந்து கட்டற்றகாளையாக விடப்பட்ட இளம்பெண்ரூபாவின் அந்தரங்க சீவியம் வேறுஎப்படி இருக்கமுடியும்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சவேரியாரின் திருமேனிக்காட்சி

இவ்வாண்டின் இறுதியிலே கோவைநகரில் நிகழவிருக்கும் அர்ச். சவேரியாரின் திருமேனிக் காட்சிக்கென்று யாத்திரிகர்களை ஏற்றிவருமாறு போர்த்துக்கேய அரசாங்கம் ஓர் கப்பலை வாடகைக்கமர்த்தியிருக்கிறது. திருமேனிக்காட்சிக்குக் குறைந்தபட்சம் இருகருதினல்மாரும், ஐம்பது அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களும் சமுகமாவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அர்ச்சியசிஷ்டரின் அழியாத் திருமேனியானது வருகிறமார்கழிமாதம் ?-ந்திகதி முதல் அடுத்த தைமாதம் 3-ந்திகதிவரையும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். இது அர்ச். சவேரியார்பரமபதமடைந்த நான்காம் நூற்றூண்டு விழாவினதும், அப்போஸ்தலரான அர்ச். தோமையார் இந்தியாவுக்குவந்த பத்தொன்பதாம் நூற்றூண்டினதும் ஞாபகார்த்த விழாக்களின் ஓர் பகுதியாயிருக்கும்.

### அங்கிளிக்கன் சபைக்கோவில்

இங்கிலாந்திலே அங்கிளிக்கன் சபையாருக்கென்று பிற்ஸ்போட்நகரிலே பெட்போட்டின் டியூக் பிரபுவால் 1867-ம் ஆண்டு கட்டப்பெற்ற கோவிலானது சமீபத்திலே மோட்சாரோபண நாயகியின் பேரால் ஓர் கத்தோலிக்க கோவிலாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளது. அவ்வேளை சமூகமளித்திருந்தவர்களில் ஸ்ரீமதி ஏ. றை அவர்களும் ஒருவர். அக்கட்டிடத்தில் ஏற்பட்டிருந்த 6,000 பவுணுக்கு மேற்பட்டதொகையை இவரே செல்லக்கட்டினர். இவரும், இவர் நாயகரும் அங்கு கத்தோலிக்கருக்கென ஓர் கோவிலை உதவுதற்கென்று அநேகவருடகாலமாக ஓர் பெருந்தொகைப்பணம் சேமித்துவைத்திருந்தார்கள்.

### லூத்தேரின் தீர்க்கதரிசனம்

லூத்தேர் புறொட்டஸ்தாந்த சபையை அடியிட்டவனை மாட்டீன் லூத்தேர் மரணமடைந்து அடக்கஞ்செய்யப்பட்ட 406-ம் வருடதினம் சமீபத்திலே வந்துபோயிற்று. அவன் சொன்ன தீர்க்கதரிசனங்களில் மிக விசேஷப்பட்டது யாதெனில், கத்தோலிக்கதிருச்சபை அதிகம் விரைவில்அழிந்து, பாப்பரசும் விரைவில் ஒழிந்துபோம் என்பதே. இதுவிஷயமாய் "ஒசேர் வாத்தோறே றோமானே" எனும் வத்திக்கான் தினவர்த்தமானி எழுதியபோது, "கத்தோலிக்க திருச்சபை அதிகம்விரைவில் அழிந்துபோகுமென்று இற்றைக்கு 400 வருடங்களின்முன் மாட்டீன் லூத்தேர் தீர்க்கதரிசனம் சொன்னபோது இருந்ததைக்காட்டிலும் இன்று அது மிகப்பலமுடையதாயும், அதிகம் கௌரவித்து மதிக்கப்படுவதாயும் இருக்கின்றது" என வரைந்திருக்கின்றது. மாட்டீன் லூத்தேர் இறந்தான். அவன் ஏற்படுத்திய புறொட்டஸ்தாந்தசபை சீர்குலைந்தேவருகிறது. ஆனல், கத்தோலிக்க திருச்சபை அப்படியன்று.

### முத். பத்தாம் பத்திநாதர்

முத். பத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்படுமாறு வேண்டிச் சமீபகாலத்திலே அனுப்பிவைக்கப்பட்டுள்ள மனுக்களில்ஒன்று, அவரிடமாக அப்போது மந்துவாநகர் மேற்றிராணியாராக நியமனம்பெற்றமென்ஞூ ஆண்டவரிடமிருந்தும், அவரது கடைசி வருத்தவேளை அவரைப் பராமரித்தவரும், அவர் மரணத்தின்போது சமுகமாயிருந்தவருமான சிலுவைஅருளப்பர் சபையைச் சேர்ந்த பிறதர் போஸ்ரிநே துய்லினிடமிருந்தும் போயின. பிலிப்பைன்நாட்டு அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் சகலரும் ஒன்றுசேர்ந்தும் ஓர் மனுப்பத்திரம் அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

### பிரபலமிஷன்அச்சியந்திரசாலை

சீனவின் கிழக்குப்பக்கமாகப் பிரித்தானிய ஆட்சியிலுள்ள ஹொங்கோங்தீவிலே பரீஸ்நகரத்துப்பிறதேசமிஷனரியசபையால் நடத்தப்படுகின்ற நசரேத் அச்சியந்திரசாலையானது பதினேழுபாஷைகளிலே செபப்புத்தகங்கள், ஞானேபதேசப் புத்தகங்கள், மற்றும்கத்தோலிக்க சமயசம்பந்தமான புத்தகங்களை அச்சிட்டுத் தூரகிழக்குநாடுகளிலே பிரதம மிஷனரிய அச்சகமாய் விளங்குகின்றது. பாஷைகள் சம்பந்தமான வேலைகளிலே விசேஷசிறப்பியல்புடையஇது பன்னிருஅகராதிகளைப் பிரசுரஞ்செய்திருக்கிறது. இவற்றிற்சில சாஸ்திரகழகங்களால் சந்மானிக்கப்பெற்று ஒக்ஸ்போட், கேம்பிறிஜ், லண்டன் சர்வகலாசாலைகளால் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த அச்சகம் 27 பாஷைகளுக்குரிய எழுபதினயிரம் எழுத்துக்களைக் கொண்டிருக்கிறது. இவைகள் மிஷனரிமாருக்குப் பல்வேறு பாஷைகளையும் படிப்பிக்க உபயோகமாகின்றன. 68 வருடங்களின்முன் இந்தஅச்சகம் ஸ்தாபிக்கப்படலாயிற்று.

### திருநாளால் வந்தபலன்

இத்தாலியின் தென்பகுதியிலுள்ள சிசிலிதீவிலே காத்தானியா நகருக்குச் சமீபமான செவெறினு, விநெரூ எனும் கிராமங்களில் அன்று புதன்கிழமை உண்டானபூகம்பத்தால் அவற்றிலிருந்த வீடுகளில்அரைவாசி பாழடைந்துவிட, மீதியான வீடுகளெல்லாம் சேதமாயின. இருவர் கொல்லப்பட, வேறு சிலர் காயமடைந்தனர். அந்தவேளை அக்கிராமவாசிகளில் ஏறக்குறைய முழுப்பேரும் வீடுகளுக்கு வெளியே நின்றிராவிடின் பெருந்தொகையானேர் இறந்திருப்பார்கள். ஆனல், அன்று அர்ச். சூசையப்பர் திருநாளைக் கொண்டாடுவதற்காக அவர்கள் வீதிகளில் சென்றுகொண்டிருக்கும்போதுதான் பூகம்பம்ஏற்படலாயிற்று. சிசிலிதீவிலே அர்ச். சூசையப்பர்திருநாள் ஓர் கடன் திருநாளாகும்.

# நீ எங்கு போயிருந்தாய்?

யோசெப் விங்ஹெறம் என்னும் ஓர் ஏழைக்கூலிக்காரன் தினமும் காலையில்எழுந்து பிழைப்புத்தேடுமுன், கோவில்சென்று பூசைகாணும் வழக்கமுடையவனயிருந்தான். அவ்வாறுநடந்துவரும்போது ஒருநாள் காலை அவன் வழமையான நேரத்திற்குமுன்னமே நித்திரைவிட்டெழுந்து கோவிலுக்குச்சென்று திவ்வியபூசை காணும் தனது வழக்கத்தைவிட்டுப் பிழைப்புத்தேடப்போய், ஒருவன் தன் புத்திசாமர்த்தியத்தில் தங்குவதிலும் தேவகடாட்சத்தில் தங்குவதுதான் நன்றுஎன்பதை நன்குஉணர்ந்தான். எவ்வாறெனில், அவன் பிழைப்புத்தேடி ஓரிடத்திற்குப்போக, அங்கே தன்னைப்போலத் திரளானேர் ஏலவேதானே பிழைப்புத்தேடிக் காத்துநிற்பதையும், அவர்களை வேலைக்கமர்த்த எவரும் வராதிருப்பதையும் கண்டு, இனிஎன்ன செய்வதென்று தனக்குள் சொல்லிக்கொண்டு தனதுவழக்கமான பக்திக்கிருத்தியத்தைச்செய்ய மனமேவப்பட்டுக்கோவிலுக்குப் போய்ப் பூசைகண்டான். பின்னர்பூசைமுடிந்து அவன்பிழைப்புத்தேடி முன்சொல்லிய இடத்துக்குப்போய்ப் பார்த்தபோது, அங்கேஎல்லாரும்பிழைப்புக்குப் போய்விட்டதைக் கவனித்து, இனிஎன்ன செய்வேனென்று விசனத்துடன் தனது குடிசையைநோக்கிப் போகும்வேளை ஓர் துரைமகன் புன்னகையோடு தன்முன் வரக்கண்டான்.

சிம்சர்மன் என்னும் அந்தத் துரைமகன் தேவசிந்தை உடையவனல்லன். ஆயினும் ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்த நாளாக ஆசரித்துவருவான். ஆனல், பாஸ்குகடமைகளை இருவருடமாக நிறைவேற்றவில்லை. என்றாலும் தன் அயலாரினல் கண்ணியவானகக் கருதப்பட்டுவந்தான். தான்ஏமாந்துபோனதைப்பற்றி யோசெப் அவனுக்குச் சொன்னன்.

துரைமகன் மறுமொழியாக, நான் என்ன செய்கிறது? போதியவேலையாட்களை எடுத்துக்கொண்டேன். கூலியாட்களை நான் தேடினேன். அந்தவேளை நீ எங்குபோயிருந்தாய்?

நான் பூசைகாணப் போயிருந்தேன்.

பூசைக்கா? என்சிநேகிதனே! சந்தேகமின்றி அது புகழ்ச்சிக்குரிய அலுவல்தான். அதற்காக நான் உன்னைக் குற்றஞ்சொல்லமாட்டேன். ஆனல், சீவிப்பதற்கு வேலைஅவசியம்அல்லவா?

ஐயா! நான் ஞாயிறு, கடன் திருநாட்களைத்தள்ளி மற்றநாட்களில் ஒவ்வொருநாளும் வெகு பிரயாசத்துடன் வேலைசெய்துவருவேன். ஆனல், இன்றைக்கு ........

போதும் போதும்; நீ கோயிலிலும், பூசையிலும்அதிகவிருப்பமுடையவன் என்பதை நான் நன்ருகத் தெரிந்துகொண்டேன். நீ வேலைசெய்யும் இந்த நேரத்திலேகோயிலுக்குப்போய் காணக்கூடிய பூசைகள் எல்லாவற்றையும் கண்டுகொண்டுவா. சாயந்தரம் உனக்குக் கொடுக்கத்தக்கதெனத் தோன்றும் பணத்தைத்தருவேன். இந்தப் பொருத்தனைக்கு நீ உடன்படுவாயா?

யோசெப் வெகுநன்றியோடு, ஆம் ஐயா! என்று சொல்லி மனப்பூரிப்புடனே கோயிலுக்குப்போய் அங்கு நிறைவேறிய பூசைகளையெல்லாம் பயபத்தியுடன்கண்டு சாயந்தரம் சம்பளத்திற்குப்போனன். துரைமகன், அவனுக்கு வழமையான கூலியும் ஒருசிறு அப்பமும் கொடுத்தான். யோசெப் மகிழ்ச்சியோடு தேவனுக்குத் தோத்திரஞ் சொல்லிக்கொண்டு வீட்டுக்குப் போகும்போது மகத்தான தோற்றமுடைய ஒருபெரியவர் வழியிலேநின்று அவனைநோக்கி: நீ மறுபடியும் அந்தத்துரைமகனிடம்போய் உனக்குப் போதிய சம்பளந் தரவில்லையென்றும், போதியளவு கொடுக்கமறுத்தால் அவனுக்குப் பொல்லாங்கு நேருமென்றும் சொல்என்றூர்.

அவன் சற்றுப் பின்னிட்டும் அப்பெரியவரின் கட்டளைக்கமைந்து துரையண்டைசென்று கருமத்தைத் தெரிவித்தான். அதைக்கேட்டதும் துரைமகன் சினந்து, இது ஒருவேளை கூலிக்காரனின் தந்திரமாயிருக்கலாமோஎனச் சந்தேகித்து அவனை நோக்கி: உனக்குத் திருப்தியில்லையென்க காண்கிறேன். மற்றக் கூலிக்காரரைப்போல உனக்கும் ஒருநாளைச் சம்பளமும், ஒரு அப்பமும் தரவில்லையா? இன்னும் அதிகமாக உனக்கு என்னவேண்டும்? நீ கெட்டிக்காரன்போல்எனக்குத் தோற்றுகிறதென்று சொல்லி, தன்னிலும்பார்க்க அவன் பூசையின் பெறுமதியை நன்ருயறிந்திருக்கலாமென்று தனக்குள் எண்ணிக்கொண்டு மேலும் ஒரு தொகைப்பணத்தை அவனுக்குக்கொடுத்தார். யோசெப் அதைப்பெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது, அந்தப்பெரியவர் மறுபடியும் அவனைச் சந்தித்துத் திரும்பியும் அந்தத் துரைமகனிடம்போ; உனக்குத்தரும் தியாகத்தைத் தரவில்லையென்றும், உனக்கு அதிகந்தர அசட்டை செய்வானயின் அவனுக்குப் பொல்லாங்கு வருமென்றும் அறிவிஎன்றூர். கூலிக்காரன் என்னசெய்வதென்று அறியாது திகைத்து, அப்பெரியவருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்தால்; இன்று காலை எனக்கு எவ்வளவோ தயவுகாட்டிய துரைமகனை மனம்வெறுக்கப்பண்ணுவேன்; நான் போக மறுப்பேனல்....என்று தனக்குள்ளே ஆலோசித்துக் கொண்டிருக்கும் வேளை, பெரியவர் குறும்பார்வையாக அவனைப் பார்த்தமையால் அவன் பயந்து, தனக்குக் கிடைத்ததைத் துரைமகனிடஞ்சென்று அறிவித்தான். இதைக்கேட்டதும் துரைமகன் பயந்துநடுங்கித் தன்பணப்பெட்டியண்டைபோய்ப் பணத்தை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

வைகாசிமாதம் 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 2 | அ. அத்தனாசியார் | (வெ) |
| சனி | 3 | அ. சிலுவை கண்டெடுத்த திருநாள் | (சி) |
| ஞா | 4 | கர்த்தர் உத்தானத்தின்பின் 3-ம் ஞாயிறு—அ. மொனிக்கம்மாள் | (வெ) |
| திங் | 5 | அ. 5-ம் பத்திநாதர் | (வெ) |
| செ | 6 | அ. அருளப்பர் | (சி) |
| புத | 7 | அ. ஸ்தனிஸ்லாஸ் | (வெ) |
| வி | 8 | அதிதூதரான அ. மிக்கேல் தரிசனையான திருநாள் | (வெ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1952-ம் ஆண்டு

வைகாசி மாதம் 1-ந்திகதி


## வணக்கமாசம்

மாதாவின் வணக்கமாசமாகிய வைகாசிமாசம் இதோவந்தது. தங்கள் அன்புக்குப்பாத்திரமான பரமஇராக்கினியை அவருடைய ஞானமக்களெல்லாம் வாயாரப்போற்றி, மனதார வாழ்த்தித் தங்களுக்குவேண்டிய இகபர நன்மைகளை விசேஷவிதமாய் இரந்துகொள்ளுமாறு ஆவலுடன் எதிர்பார்க்கும் வணக்கமாசம் இதோ! பிறந்தது. பூலோகமாகிய இக்கண்ணீர்க் கணவாயிலே வாழ்கின்ற நாமெல்லாம் எமது ஆபத்து அவசரங்களில் பரலோகத்தை ஏறெடுத்து, கிருபை தயாபத்துக்கு மாதாவாகிய எங்கள் இராக்கினியே, எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமேயென்று அபயமிட்டு உதவிக்குஓடிப்போகின்ற மாதாவின் வணக்கமாசமாகிய வைகாசிமாசம்உதயமாகிவிட்டது. சூரியனின் உதயத்தாலே தாமரைகள் மலர்வதுபோன்று, மாதாவின்வணக்கமாச உதயத்தாலே நமது இருதயகமலமும் மலரவேண்டியது. இவ்வசந்தகாலப் புஷ்பங்களைப்போல் நாமும் எமது இருதயங்களை மலரச்செய்து, இயற்கைப் புஷ்பங்களுடன் எமது இருதயபுஷ்பங்களையும் மாதாவின பாதாரவிந்தங்களிலே சாத்தவேண்டியது. தமது வணக்கமாசத்திலே தேவதாயார் தம்முடையபிள்ளைகளை விசேஷ கிருபைக்கண்கொண்டு நோக்குகின்றார். அன்று கல்வாரிமலையிலே தமதுதிருக்குமாரனின் சிலுவையடியில் தமது பிள்ளைகளாகப் பெற்றெடுத்த மனுமக்கள்மேல் அவர் விசேஷ கருணை கொள்ளுகின்றார். தமது மக்கள் தம்மை அதிகமாக நாடி வரும்போதும், தம்மைப்பாடித் துதிக்கும்போதும் அவர்கள் மேல்மிகுந்த அன்புகூருகின்றார். இதோ இன்றுமுதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதியெனப் புகழ்ந்துகொண்டாடுமென்ற அந்தத்திருவாக்கு நிறைவேறுவதைக்கண்டு ஆனந்திக்கின்றார். வண்டினங்கள் மதுவைவேண்டி நறுமலரை நாடிச் சரிவதுபோன்று தமது ஞானமக்களும் அனுக்கிரகங்களைவேண்டித்தம்முடையமலர்ப் பதங்களைநாடிச் சரிவதைக்கண்ணுற்று அவர் உள்ளங்கனிந்து உவகையடைகின்றார். மாதாவின் மாசம் அவரது பிள்ளைகளுக்கெல்லாம் ஓர் பாக்கியமானமாசம். அதனால் இந்த வணக்கமாசத்தை நாம் வழமைபோல அதிபத்திச் சிறப்பாய்க் கொண்டாடவேண்டும். அது ஆரம்பமாகி முடிகிறவரையிலே காலைமாலை கோவில்சென்று வணக்கமாசப்பத்தியை அனுசரிக்கவேண்டும். கோவிலுக்குச்செல்ல இயலாதிருப்பின் வீட்டிலேயே மாதாவின் சுரூபத்தை அல்லதுபடத்தைப் பிரசித்தமாக ஸ்தாபித்து, அதனைச் சிங்காரித்து, சுகந்தபுஷ்பங்கள் சாத்தி, மெழுகுவர்த்திகள் ஏற்றி மாலைவேளை குடும்பத்தாரெல்லாம் ஒன்றுசேர்ந்து செபமாலை, பிரார்த்தனை முதலாம் செபங்களாலும், திவ்வியகீதங்களாலும் மாதாவின் புகழைப்பாடி அவரது உதவிசகாயங்களை இரந்துமன்றாடி வணக்கமாசப்பத்தியை அனுசரித்து வரவேண்டும். இவ்வாறெல்லாம் அவரது விசேஷ அன்பிற்கும், கருணைக்கும் எம்மைஅருகராக்கிக் கொள்ளவேண்டும். பாத்திமாபதியிலே மாதாகாட்சியளித்துக் கூறிய பொன்மதிகளை இந்தமாசத்திலே நாம் விசேஷவிதமாக நினைவுகூர்ந்து அலைகடல் போன்று நிலைதளர்ந்து கொண்டிருக்கும் இந்த உலகுக்குச் சமாதானமும் அமைதியும் தந்தருளும்படியாக அவரைச் சதா இரந்து வருவோமாக!

---

கர்த்தர் உத்தானத்தின்பின்

## 3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(அரு. 16 : 16—22)

அக்காலத்தில்யேசுநாதர் தம்முடையசீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இன்னுங் கொஞ்சக்காலம்; இதன்பின் நீங்கள் என்னைக்காணமாட்டீர்கள்; மீண்டும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காண்பீர்கள். ஏனென்றால், நான் பிதாவினிடம் போகிறேன் என்றார். ஆதலால், அவருடைய சீஷர்களில் சிலர்: கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காணமாட்டீர்கள். மீண்டும்கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காண்பீர்கள்; ஏனெனில், பிதாவினிடம்போகிறேனென்று நமக்குச் சொல்லுகிறாரே; அதென்ன? என்றுஒருவரோடு ஒருவர் சொல்லிக்கொண்டார்கள். இன்னும் கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? இவர் வசனிக்கிறது ஏதுஎன்று விளங்கவில்லையே என்றார்கள். யேசுநாதரோ அவர்கள் தம்மைவினவவிரும்புகிறார்கள்என்று அறிந்து அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக்காணமாட்டீர்கள்; பின்னும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதினால் அதைக்குறித்து உங்களுக்குள்ளே கேள்விகேட்கிறீர்களே. மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் பிரலாபித்துஅழுவீர்கள், உலகமோ சந்தோஷப்படும். ஆனால், நீங்கள் துக்கப்படுவீர்கள். ஆயினும் உங்கள் துக்கம்சந்தோஷமாகமாறும். ஸ்திரீயானவள்பிரசவிக்கையில் தன் காலம் வந்திருக்கிறதினாலே துயரப்படுகிறாள். பிள்ளையைப் பெற்றபின் போவெனில் ஓர் மனிதன் உலகத்திற்பிறந்ததினால் சந்தோஷமுடையவளாய் இனி, பிரசவவேதனையை நினையாள். அப்படியே நீங்களும் இப்போது துயரமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். ஆனால், மறுபடியும் உங்களைக் காண்பேன். அப்போது உங்கள் இருதயம் சந்தோஷிக்கும். மேலும், உங்கள்சந்தோஷத்தை உங்களிடத்திினின்று ஒருவனும் பறியான் என்றார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டவதாக.

---

## சுதேச வர்த்தமானம்

### புதிய டீசல் எஞ்சின்கள்

இக்கால நவீனமாதிரியான 25 டீசல் எஞ்சின்கள் றெயில்வேப் பகுதிக்கென்று சமீபத்திலே வந்துசேரவிருக்கின்றன. இவைகள் வந்துசேர்ந்ததும் பிரயாணிகளுக்குத் தீவிரமும், சிறந்தனவுமான றெயின்சேவை நடத்தமுடியுமென றெயில்வேப்பகுதியார் நம்புகின்றனர். இலங்கையிலே தற்போது பாவனையில் இருந்துவருகின்ற றெயில்வே எஞ்சின்களில் எழுபது எஞ்சின்கள் முப்பதுக்கும் நாற்பதுக்கும் இடைப்பட்ட வருடகாலம் வேலைசெய்திருக்கின்றன. அவற்றிலும் 15 எஞ்சின்கள் 40 வருடம் கண்டவைகளாம்.

### 306 அபேட்சகர்கள்

சமீபத்தில் நடந்தேறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே 95 ஸ்தானங்களுக்குமாக 306 அபேட்சகர்கள் சென்றதிங்களன்று குறிக்கப்பட்ட நியமன ஸ்தானங்களுக்குச் சென்று தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். சபாநாயகரின் தொகுதிஉட்பட எல்லாத் தொகுதிகளிலுமேபோட்டி இருக்கிறது சபாநாயகருக்கெதிராக அரசியற்கட்சி எதுவுமே அபேட்சகரை நிறுத்தவில்லையெனினும் ஒருவர் சுயேச்சையாக அவருடன் போட்டியிடுகின்றார். 1947-ம் ஆண்டுநடைபெற்ற பொதுத் தேர்தலிலே 95 ஸ்தானங்களுக்கும் 361 அபேட்சகர்கள் நியமனப்பத்திரங்கள் சமர்ப்பித்துத்தெரிவிற்கு முற்பட்டுநின்றார்கள்.

சமீபத்தில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலிலேபோட்டியிடவிருக்கும் 306 அபேட்சகர்களிலும் யு. என். பி. அபேட்சகர்கள் 81 பேர். இந்தக் கட்சியே கூடுதலான அபேட்சகர்களை நியமனஞ்செய்திருக்கிறது. அடுத்தபடியாகச் சுயேச்சைவாதிகள் 80 பேர் போட்டியிடுகின்றார்கள். பொதுவிலே சகலகட்சிகளையுஞ்சேர்ந்த அபேட்சகர்களின்தொகைகள் வருமாறு:

| | |
|---|---|
| ஐக்கியதேசியக் கட்சி | — 81 |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | — 50 |
| நவலங்கா சமசமாஜிக் கட்சி | — 40 |
| கம்யூனிஸ்த கட்சி | — 16 |
| லங்கா சமசமாஜிக் கட்சி | — 6 |
| தொழிற்கட்சி | — 6 |
| குடியரசுக் கட்சி | — 11 |
| புத்தகுடியரசுக் கட்சி | — 2 |
| தமிழ்க்காங்கிரஸ் கட்சி | — 7 |
| தமிழரசுக் கட்சி | — 7 |
| சுயேச்சை வாதிகள் | — 80 |

### அபேட்சகராக நிற்கவில்லை

முந்தியபாராளுமன்ற அங்கத்தவர்களாயிருந்த மூவர் புதியபாராளுமன்றத்தேர்தலில் அபேட்சகர்களாகமுன்வந்திலர். இவர்களில் ஒருவர், பண்டாரவளை ஐக்கியதேசியகட்சிப் பிரதிநிதியாயிருந்த திரு. கே. வி. நடராஜா. இவர் ஐ. தே. கட்சியியமன அபேட்சகருக்குச் சார்பாக நின்றுவிட்டார். மற்றவர், திரு. எச். டிசற். சிறீவர்த்தன. ஐ. தே. கட்சியின் நீர்கொழும்புப் பிரதிநிதியாய் இருந்துவந்த இவரும் அக்கட்சியின் நியமனஅபேட்சகருக்குச் சார்பாக நின்றுவிட்டனர். கம்யூனிஸ்தகட்சியின் மாத்தறைப் பிரதிநிதியான திரு. ஹரி குணவர்த்தன என்பவரும் திரும்பவும் அபேட்சகராக வாரமல் நின்றுவிட்டனர்.

### க்ஷயரோக புதியமருந்து

க்ஷயரோகத்தைக் குணமாக்குவதில் ஆச்சரியகரமானதென்று சொல்லப்படுகின்ற "ஐசொனிக் கொட்ரினிக் அசிட் ஹைட்ரேசிட்" எனும் மருந்து கொண்டு தற்போது வெலிசறை ஆஸ்பத்திரியிலே க்ஷயரோகிகள் சிகிட்சை செய்யப்பட்டு வருகின்றார்கள். இதன் நயசுகத்தை அறிந்துகொள்ள இலங்கையிலுள்ள இரண்டு லட்சம் க்ஷயரோகிகளும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். "ஸ்றெப்ரோ மிசின்"என்ற மருந்தைக்காட்டிலும் இந்தப் புதிய மருந்து சாலச்சிறந்ததென்று அமெரிக்கவைத்தியர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாலே இந்தமருந்து எங்கெங்குமே ஆவலுடன் வேண்டப்படு

---



அர்ச். சூசையப்பரின்

## அடைக்கலத்திருநாள்

கொழும்புத்துறை

இத்திருநாள் வழமைப்பிரகாரம் கொழும்புத்துறைத் தாபனத்தில் வைகாசிமாதம் 11-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பத்திச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்குச் சமுகந்தரும்படி அர்ச். சூசையப்பரின் பக்தர்களையும், தாபன பழைய மாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சிகள்

**10-5-52** சனிக்கிழமை
மாலை 7-00 மணிக்கு மாலை ஆராதனை.

**11-5-52** ஞாயிற்றுக்கிழமை
காலை 7-00 மணிக்கு பாடற்பூசை.
காலை 11 மணிக்குப் பழைய மாணவர் சங்கவருடாந்த பொதுக்கூட்டம்.
மாலை 4-30 மணிக்கு மாலை ஆராதனையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்

**12-5-52** திருநாளை முன்னிட்டு ஆசிரியர்களுக்கு விடுமுறைநாள்.

தாபனத்தலைவர்

கொழும்புத்துறை
24-4-52.

வெளிவந்துவிட்டது !

## பாலர் எண்-கணித புதுமுறை வாய்பாடு

இவ்வாய்பாடு ஒன்றுமுதல் நூறுவரை (1—100) உள்ள எண்களின் தானவிலையைப் பாலர் பகுத்தறியவும், கரும்புள்ளி செம்புள்ளிகளின் உதவிகொண்டு இலகுவானவழியில் கூட்டல் வாய்பாட்டை மனனம்பண்ணவும் ஏற்றவாறு அமையப்பெற்றது.

இவ்வாய்பாடு அட்டைகள் "வாய்பாடுகளை மனனஞ்செய்வதில் பாலர்களுக்கு ஆர்வத்தை எழுப்பிவிடுவதோடு, ஆசிரியர்களது வேலையையும் இலகுவாக்கிவிடும்" என்பதாகப் பல ஆசிரியநண்பர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆசிரியஉலகம் இதனைஆதரித்து மேலும் இத்துறையில் ஊக்குவிக்கும் என்பது எம்துணிபு.

தேவையானோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

தனிப்பிரதி சதம் 15

**Manager,**
St. Joseph's Catholic Press,
JAFFNA.

### ரோமை விசாரணைப்பங்குகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

முடிவுக்குள் மற்றும் நான்கு விசாரணைப்பங்குகளும் நவமாக வகுக்கப்படவிருக்கின்றன. நிகழும் நூற்றாண்டின் ஆரம்பத்திலே ரோமைநகர் விசாரணைப் பங்குகளின்தொகை 58 மாத்திரமே. தற்போதைய விசாரணைப் பங்குகளிற்சில முப்பதினாயிரத்துக்கும், நாற்பதினாயிரத்துக்கும் இடைப்பட்ட தொகையான சனங்களைக் கொண்டிருக்கின்றன. அதனால் இவற்றிலே விசாரணைசெய்வதற்குப்போதிய குருமார் இல்லாக்குறை பெருங்குறையாய் இருந்துவருகிறது.


### சம்பாதியுங்கள்

முதல் இல்லாமலே உங்கள் ஓய்வான நேரங்களில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபா முதல் 300 ரூபா வரையில் சம்பாதியுங்கள். விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

Girson Knitting Works,
Ludhiana.


கிறது. டக்றர் ஜே. ஆர். வில்சன் அவர்கள் வெலிசறை ஆஸ்பத்திரியிலே மாதிரிக்காகப் பெற்றுள்ள புதியமருந்தைப் பரிசோதனைசெய்து வருகின்றார். அதன் நயசுகத்தை அவர்விரைவிலே அரசினருக்குத் தெரிவிக்கவிருக்கின்றார்.

### பிரதமரின் விஜயம்

பிரதமர் டட்லி சேனநாயக அவர்கள் ஐக்கியதேசியகட்சித் தேர்தற் பிரசாரத்தை முன்னிட்டு இம்மாதம் 13-ந் திகதி கீழ்மாகாணத்தைத் தரிசித்துக் கற்குடா, பொத்துவில், கல்முனைத் தொகுதிகளில் நடந்தேறும் கூட்டங்களில் பேச்சுகள் நிகழ்த்தவிருக்கின்றார்.

### சிட்னிநகர் அதிமேற்றிராணியார்

பார்சலோனா நகரிலே இம்மாசக் கடைசியில் நடந்தேறவிருக்கும் சர்வதேச சற்பிரசாதமகாநாட்டிற் கலந்துகொள்வதற்காக ஆஸ்திரேலியதேச சிட்னிநகர் அதிமேற்றிராணியாரான கருதினால் கில்றோய் ஆண்டவர் ஓர் கப்பலிலே அங்குசெல்லும்வழியில் சென்றசெவ்வாய்க்கிழமை கொழும்பு நகரில்இறங்கி அதிமேற்றிராணியாரின் விருந்தாராயிருந்து செல்லுகின்றார்.

வெளிவந்துவிட்டது !

தேவ மாதாவின்

## வணக்கமாதம்

| | ரூ. ச. |
|---|---|
| விலை பிரதி ஒன்று | 1—50 |
| தபாற்செலவு .... | —30 |

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

## இராஜாஜியின் அறிவுரை

**சென்னைச்சட்டசபைக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதையொட்டி ஸ்ரீ இராசகோபாலாச்சாரி அவர்கள் நிகழ்த்திய அறிவுரையிற் சில:**

**கடவுள்:** கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையைவிடக் கடவுள் நம்மத்தியில் எப்பொழுதும் இருக்கிறார் என்றநம்பிக்கை மிக மேலானது. பிறர் அறியாது மறைவில்செய்யும் காரியங்கள் இறைவன் முன்னால் திரைகிழிக்கப்பட்டுவிடும். இந்த நம்பிக்கை இருந்தால் அங்கத்தினர்களிடம் கள்ளம்கபடு இடம்பெறாது.

இக்கால இளைஞர்கள் தங்கள் உடல்வலுவையே நம்பிவாழ்கிறார்கள். உலகம் தானாகவே இயங்குகிறதுஎன்பது அவர்கள் வாலிபமுறுக்கினாலும், இரத்தக் கொதிப்பினாலும் கண்டமுடிவு. ஆனால், விமானியின்றி விமானம் ஓடுவதில்லையென்று அவர்கள் அறியவேண்டும். மரத்துக்கு நீர்ப்பாய்ச்சி, களையெடுத்து வளர்க்கும் தோட்டக்காரனைப்போல் மனிதவளர்ச்சிக்குக் கடவுளே காரணமாயிருக்கிறார்.

**கம்யூனிஸ்தர்கள்:** இங்கு கம்யூனிஸ்தர்கள் இன்னும் ஒளிவுமறைவு வேலைகளில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள். உடற்பலந்தான் அவர்கள் நம்பிக்கையேயொழிய உள்ளப்பலமல்ல.

அவர்கள்மட்டும் 'உளப்பூர்வமாக ஒழுக்கம், கடவுள்தன்மை, மதம் இவைகளை மற்றவர்களைப்போலவே அனுசரிக்கிறோம்' என்று வாக்களிக்கட்டும்; உலகமே கம்யூனிஸத்தை வரவேற்கும். தான்தோன்றித்தனமும், லோகாயதமும், அராஜகமும், திரைமறைவுவேலைகளும் அவர்கள் மேற்கோளாயிருப்பதால்தான் உலகமே அவர்களை விரோதிக்கிறது; மக்கள் அவர்களைவெறுக்கிறார்கள்.

நான் கம்யூனிஸ்தனல்ல; ஆகவே அவர்களுக்கு உபதேசிக்கும்உரிமையையும் எனக்கில்லை. என்னைப்பொறுத்த அளவில் கம்யூனிஸ்தர்களைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கூறிவிட்டேன். வெளிக்குமுன்னேறிவிட்டதாக அவர்கள் காட்டிக்கொண்டாலும், உண்மையில் அழிவுப்பாதைதான் அவர்கள்நிற்பது.

— கம்யூனிஸ்தஆட்சியிலே இருந்துவருகின்ற செக்கோசிலவாகிய நாட்டிலுள்ள தங்கள்மடத்திலிருந்து 15,000 கத்தோலிக்ககன்னியாஸ்திரிமார் துரத்தப்பட்டதாகவும், அவர்களிற் பெரும்பாலானோர் காவல் முகாங்களில் சிறைவைக்கப் பட்டிருப்பதாகவும் வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.



ஒவ்வொருவருஷமும் பத்திமாகிரியில் அதி பிரதானமான நாள் வைகாசி 13-ந் திகதியே. அது கோவா டி இறியாவில் பத்திமாமாதா கொடுத்த முதல்காட்சியின் வருஷாந்தர நாள்.

கடந்தஆறுவருடங்கள் செய்ததுபோல் இம் மிகமுக்கியமான சம்பவத்தின் ஞாபகார்த்தமாக, அசாவாவின் மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. ஏ. கியோமார், ஓ. எம். ஐ. ஆண்டவரவர்களால் நடுச்சாமப்பூசை நிறைவேற்றப்படும். திவ்வியபூசையின் முன் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்யப்பட்டு முழுச்செபமாலை தியானத்துடன் ஓதப்படும். 12-ந் திகதி பின்னேரம் 7-30-க்குத் திருச்சடங்குகள் ஆரம்பமாகும். இத்தினத்துக்கு ஆயத்ததினமாகப் 10-ந்திகதி தொடக்கம் மூன்றுதினங்களாகத் திரிதின ஆராதனை நடைபெறும். அத்தினங்களில் செபமாலையும், பிரசங்கமும், 7 மணிக்குத் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் இருக்கும்.

ஆனிமாதம் 7-ந் திகதி பத்திமாகிரியில் நோயாளரின்நாள். யாழ்ப்பாண மேற்றிராணியாராகிய மகாவந். ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவரவர்களால் நோயாளரை ஆசீர்வதிக்கும் திருச்சடங்கு நிறைவேற்றப்படும். இன்னும் இதைப்பற்றிய குறிப்புகள் நேரத்துடன் கொடுக்கப்படும்.

**Henri Gesland,** O.M.I.
கட்டளைக்குரவர்

### நீ எங்கு போயிருந்தாய் !

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

எண்ணிப்பாராது கைகொண்டமட்டும் அள்ளிக்கொண்டுவந்து கூலிக்காரனின் சட்டைப்பையிற் போட்டு அவனை அனுப்பிவிட்டான்.

அன்றிரவுதானே யேசுநாதர் நீதியாசனத்தில் வீற்றிருந்தபடி மிகுந்தமாட்சிமையோடு அந்தத்துரைமகனுக்குத் தரிசனையாகி, அவன் கட்டிக்கொண்ட பாவங்களை அவனுக்குக் காண்பித்து அவனுடைய மதிகெட்ட சீவியத்தைக் கண்டித்து இன்று அந்த ஏழைக்கூலிக்காரன் உன் கருத்துக்காகப் பூசைகண்டு ஒப்புக்கொடாதிருந்தால், நீ இன்றைக்கே இறந்து நித்தியநரகத்திற்குத் தீர்வையிடப்பட்டிருப்பாயென்று சொல்ல, காட்சி மறைந்தது. மறுநாட்காலை துரைமகன் சரீரமெல்லாம் வியர்வையொழுகச் செபத்தினதும், திவ்வியபூசையினதும் பெறுமதி எவ்வளவென்பதை நன்கறிந்தவனாய் எழுந்தான். சந்தேகமின்றி அநேகர் தங்கள் சீவியத்தில் அடைந்துள்ள அனுகூலங்களையும், ஆத்துமஇரட்சணியத்தையும், திவ்வியபூசை காண்பதினாலேயே அடைந்தார்கள் என்பதில் சந்தேகமென்ன ?

## பொழுது போக்கு

படக்காட்சித்தலைவர் — (ஓர் துரைசாணி தனதுநாயுடன் படக்காட்சி மண்டபத்துள்சென்று படக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது அவர் துரைசாணியினண்டை நாயைக்கவனித்துவிட்டு) நீங்கள் இப்படியெல்லாம் நாயைக்கொண்டுவருவது நல்லதல்ல.

துரைசாணி — இதைப் போலும் ஓர் சிறியநாய்க்குப் படக்காட்சி யாது தீமை செய்துவிடப்போகிறது.

* * *

—அமெரிக்கஐக்கிய தேசத்திலே எக்காலத்திலாவதுபோடப்பட்ட மகாப்பெரிய அணுகுண்டு அங்குநெவடாவைச் சேர்ந்த யூக்தாபிளாற்ஸ்எனும் பரிசோதனைப்பகுதியிலே சென்ற 22-ந் திகதி வெடிக்கலாயிற்று. இதுவெடித்த சத்தமும், அப்போதுண்டான காட்சியும் றேடியோமூலமும், ரெலிவிஷன் மூலமும் நியூயோக்நகரில் காணவும் கேட்கவும் கூடியனவாயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்ஒலி—ஆண்டுமலர் 1952

கோட்டாறுமேற்றிராசனத்தின் கத்தோலிக்க பத்திரிகை "தென்ஒலி" என்பது. இஃது அம்மேற்றிராசன மக்களிடையே சப்திக்கத்தொடங்கி நான்குவருடங்கள் பூர்த்தியாகின்றன. இச்சந்தர்ப்பத்திலே இது ஆண்டுமலராகத்தோற்றுவது மகிழ்ச்சிக்குரியதே. "கர்த்தரின்உத்தானநாளில் இதன் ஒலி முதலில்தொனித்தது. எனவே, இம்மலரை உயிர்த்தபரமனின் மலரடிகளிற் காணிக்கை வைக்கின்றோம். சாலவவென்று வாழ்வைத் தந்தார் அகமகிழ்வோம். அவர் கருணையால் எம்ஒலியும் ஐந்தாண்டை எட்டிப் பிடித்து ஆண்டுமலராகப் பூத்துவிட்டது" என்று சித்திரைமாதத்திலே இந்தஆண்டுமலர் வெளிவந்ததற்றதன் காரணத்தைத் தெரிவிக்கின்றார் இதன் ஆசிரியர். இதிலே முதற்கண் அமெரிக்கபிரபல எழுத்தாளரும், மேற்றிராணியாருமான புல்ரன் ஷீன் ஆண்டகை அவர்களது கட்டுரைஒன்றின் தமிழாக்கம் கருத்தைப் பெரிதும் கவர்கின்றது. தூத்துக்குடித் துணைமேற்றிராணியார், சுவாமி அமலதாசன், தனிநாயகஅடிகள், பண்டிதர் எம். பி. மஸ்கரேஞாஸ், தோமஸ் சீனிவாசன், எஸ். எம். அமலதாஸ், வித்வான் சேவியர்முத்து, வித்தான் காலிங்கராயன் முதலாம் தமிழறிஞர்களின் அரியகட்டுரைகளும், கவிதைகளும், சிறுகதைகளும், நாடகங்களும் இதனை அழகுபடுத்துகின்றன. இந்தியாவிலே தமிழ்நாட்டின் தெற்குஎல்லையிலிருந்து வருகின்றதாகலின் "தென்ஒலி" எனும் காரணப்பெயர் புனைந்ததும், கத்தோலிக்க தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெருந்துணையாய் நிற்பதுமாகிய இவ்வொலியின் ஆண்டுமலரை அத்துணைசிறப்பாக வெளியிட்டருளிய ஆசிரியசுவாமிகளுக்குத் துதிசாற்றி நமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிபாராட்டுகின்றோம். ஓர்மாதவெளியீடாகிய 'தென்ஒலி'யின் வருடசந்தா ரூபா 1. அணா 4. தனிப்பிரதி அணா 2.

கிடைக்குமிடம்: அஸிஸி அச்சகம்,
நாகர்கோவில்
தென் இந்தியா.

## "தேசத் தொண்டன்"

அதிபர்: பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை, கட்டைவேலி, கரவெட்டி, யாழ்ப்பாணம். பிரசுரம், சுதந்திரன் பிறெஸ், 194 A. தட்டாதெரு, கொழும்பு. வருடசந்தா ரூபா 10. தனிப்பிரதி சதம் 30.

"சிறந்ததொண்டாம் தேசத்தொண்டினை மறந்தும்புரிதல் மக்கள்கடனே" எனும் விருதுவாக்கியத்துடன் வெளிவரத்தொடங்கியிருக்கும் "தேசத் தொண்டன்" எனும்வாரப்பத்திரிகையின் மலர் 1, இதழ் 1 தரப்பெற்றோம். இதிலே "தமிழ்மொழிமாண்பு," இலக்கிய ஆராய்ச்சி, "குடும்பவைத்தியம்" ஆதியாம் தலையங்கங்களுடன் அநேக கட்டுரைகளும், பொன்மதிகளும், தொண்டுசம்பந்தமான பல்வேறு விஷயங்களும் இனிமையான தமிழிலே அறிஞர்பலராலும் எழுதப்பெற்றுக் காட்சியளிக்கின்றன. ஆசிரியர் கே. ரி. ஞானப்பிரகாசம் அவர்கள் யாத்தளித்த வாழ்த்துக்கவிகளும், திரு. கே. எஸ். அருணந்தி, எம். எஸ்சி. அவர்களின் முன்னுரையும் வாழ்த்தும் இதன் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றன. "சிந்தாமணியும், தேம்பாவணியும்" என்ற தலையங்கத்தில் வெளிவந்த இலக்கிய ஆராய்ச்சியின் ஒரு பகுதி நம்பத்திரிகையில் வெளிவந்துள்ளது. தேசத்தொண்டர்களெல்லாம் இதனை ஆதரிக்கவேண்டுமென ஆசித்து, நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

## நானாசங்கதிகள்

— சினிமாப்படங்கள் தயாரிப்பதில் பேர்பெற்ற ஹொலிவூட்டிலே "பாத்திமாநாயகியின் புதுமை"எனும் நாமத்துடன் நவமான ஓர்சினிமாப்படம் தயாரிக்கப்படுகிறது. 11 வயசுடைய சம்மி ஒக், 11 வயசுடைய சூசன் வின்னி, 9வயசுடைய ஷெறி ஜாக்ஸன் எனும் மூன்றுபிள்ளைகள் அதிலே இடைப்பிள்ளைகளாக நடிக்கின்றார்கள். வண. ஊர்பன் நக்கின் சுவாமியார் ஆலோசகராய் இருந்துவருகின்றார்.

— சன்டேஎனும் பாஷையைப் பேசுகிறவர்களாய் மத்தியஆபிரிக்காவிலே இருபதுலட்சம் ஆபிரிக்கமக்கள் இருக்கின்றார்கள். ஆனால், இந்தப் பாஷைக்கு எழுத்தேகிடையாது. இப்போது ஆங்கிலமாதிரியிலே சப்தத்துக்கேற்க உச்சரிக்கும்முறையில் இப்பாஷைக்கு எழுத்துகள் வகுக்கப்பெற்று அதிலே முதல்ஞானோபதேசப் புத்தகம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

— டில்லியிலே "அழகுஇராணி"யின் அடக்கச்சடங்குஒன்று ஆடம்பரமாக நடந்தேறியது. அதாவது, இந்திய பெண்ணினத்துக்கே அவமானம் வருவிக்கத்தக்கவகையில் அழகிகளின் போட்டிகள்நடத்துவதை ஆட்சேபித்து டில்லியிலுள்ளபல்வேறுகலைச்சங்கங்களும், சமூகஊழியசங்கங்களும் ஒன்றுசேர்ந்து 'அழகுஇராணி" (Miss India)எனஒருபொம்மையைச் செய்து அதனைப்பகிரங்கமாக அடக்கம்பண்ணலாயின.

— ரோமைநகர் சென்ற 21-ந் திகதியன்று தனது 2705-வது பிறந்தபெருநாளைக் கொண்டாடியது. ஞாபகார்த்தவைபவங்கள் அங்கே உரோமர்களின் பிரதானதெய்வமான யூப்பிற்றரின் புராதனரோமைக்கோவிலிருந்த இடமாகிய கப்பிற்றல்குன்றிலே நகரமேயராலும், நகரசபையினாலும் நடத்தப்பட்டன. பாரம்பரியம் கூறுகிறபடி, ரோமைநகர் கி. மு. 753-ம் ஆண்டு சித்திரை 21-ந்திகதி அடியிடப்படலாயிற்று.

—பரிசுத்தபாப்பரசர் சென்றவியாழக்கிழமை கம்பொடியாநாட்டின் நொரோடம்சிகானுக் மன்னருக்கு வத்திக்கானின் பூரண ஆடம்பரவைபவங்களுடன் விசேஷபேட்டி அருளினரெனத் தந்திச்சமாச்சாரம் எட்டியிருக்கிறது. பாப்பரசர் வத்திக்கான் மாளிகையிலுள்ள தமது அந்தரங்க நூல்நிலையத்திலே அரசரைவரவேற்கலாயினர்.

—உலகின்குடிசனத்தொகை 239 கோடியே 99 லட்சம்பேரென ஐக்கிய நாடுகளின் புள்ளிவிபரமதிப்புக் காரியாலயம் மதிப்பெடுத்திருக்கிறது. இவர்களில் அரைவாசிப்பேர் அதாவது 127 கோடியே 20 லட்சம்பேர் ஆசியாவில் இருக்கின்றார்கள். சோவியற் ருஷியாஉட்பட ஐரோப்பாவில் 58 கோடியே 66 லட்சம்பேர் இருந்துவருகின்றார்கள்.

— மாட்சிமைதங்கிய எலிசபேத் மகாராணியாரின் முடிசூட்டுவிழாத் தினமாக அடுத்தவருடம் ஆனிமாதம் 2-ந் திகதி குறிக்கப்பட்டிருப்பதாக உத்தியோகபூர்வமான ஓர்பிரகடனஞ் செய்யப்பட்டிருக்கிறது. வைகாசி, ஆனிமாதங்களே பிரித்தானியில் முடிசூட்டுவிழாக்களுக்குப் பிரதானமான மாதங்களாகும்.

—இமயமலையிலே உலகின் மகா உன்னதமான எவறெஸ்ற்சிகரத்தின் உச்சியில் எந்தவிதமும் ஏறிவிடவேணுமென்ற முன்னில்லாத அதிகம்திட நிர்ணயத்துடன் சென்ற 22 ந் திகதி சுவிற்சாலாந்தகோஷ்டி ஒன்றைச் சேர்ந்த 11பேர் அச்சிகரத்தில்ஏறத் தொடங்கியிருக்கிறார்கள். இதுவரை எவறெஸ்ற்சிகரத்தின் உச்சியைச்சேர ஏழுமுறை பிரயத்தனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! பாராளுமன்றத் தேர்தல் ஆரவாரங்கள் பரபரப்பாய் எழுந்துவிட்டன. இதுபற்றியகதைதான் இனிமேல் எமது நாடு நகர்எங்கும் அடிபடுமென்று சொல்லவேண்டியதில்லை ஆனால், கதைப்பதில் ஒன்றுமில்லை. கவனமாகக் கருமத்தை முடிப்பதுதான் சாலச்சிறந்தது. சிலுசிலுப்பல்ல, பலகாரந்தான் வேண்டியது. இதனை நாட்டுமக்கள் இம்முறையாவது கவனித்து நடக்கவேண்டியது அவர்கள் கடனாகும். அதிலும் விசேஷமாய்க் கம்யூனிஸ்தர்கள், சமசமாஜிகள் முதலானோரின் இடதுசாரிக்கட்சியில் இறங்கக்கூடியவர்களைப்பற்றி அதிகம்விழிப்பாய் இருக்கவேண்டியது. நிற்க, இம்முறை சிறுபோக வேளாண்மை மிக நேர்மையாக ஆரம்பமாயிருக்கிறது. இம்முறை கையாளப்பட்டுவரும் புதுமுறையால் சைலஞ்சஊழலும், அதிக நெற்செய்கைநடத்தும் ஒருசிலதனவந்தரின்பேராசையும் ஓரளவிலே குறைக்கப்படுமென்பது திண்ணம்.

வாசிகசாலைத் திறப்புவிழா:—நானாட்டான்மேற்கு இலகடிப் புதிய கத்தோலிக்க பாடசாலைக்கண்மையில் நவமாக அமைக்கப்பட்டிருக்கும்வாசிகசாலைத் திறப்புவிழாவைபவம சமீபத்திலே மன்னார் உதவிஏசன்றர் திரு. ஈ. ஜீ. மொறக்கொட அவர்கள் தலைமையில் சிறப்பாகநடைபெற்றது. ஆரம்பத்திலே காரியதரிசி ம. மனவல் அவர்களால் மாலையிட்டுத் தலைவர் வரவேற்கப்பட்டனர். பின்னர் தனதிகாரி பே. செபமாலை என்பவரால் ஓர் வந்தனோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அப்பால் தலைவர், இலகடிக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமைஆசிரியர், முசலிக் காரியாதிகாரி, நானாட்டான் கிராமச் சங்கத்தலைவர் என்பவர்களின் சொற்பொழிவுகளுடனும், புதியஉத்தியோகஸ்தர் தெரிவுடனும் விழாமுடிவெய்தியது.

விசேஷவீதி:—பரப்புக்கடந்தானிலிருந்து மருதமடுத் திருப்பதிக்குச் செல்லும் குறுகியபாதையாகிய 12 மைல் நீளமானவீதி ஓர் விசேஷவீதியாகும். ஏனெனில், மருதமடு மகோற்சவகாலங்களிலே பெருந்தொகையான யாத்திரிகர்கள் பரப்புக்கடந்தானிலுள்ள கர்த்தர்கோவிலைக் காண்கள், பஸ்கள்மூலம் வந்துசந்தித்துப் போவது வழக்கம். ஆனால், இந்தப்போக்குவரத்து மேற்சொன்னவீதி போதிய நன்னிலையில் இல்லாமையால் மடுரோட்டுப்பாதையால் சுற்றிவந்தே நடத்த வேண்டியிருக்கிறது. ஐம்பதுமக்கள் தானும்கூடாத சிலசிறுகோயில்களுக்குக்கூட இப்போது புதியபாதைகள்சிறந்தமுறையில் திறக்கப்பட, இப்பெரிய யாத்திரைத்தலங்களுக்கு இடைப்பட்டுக்கிடக்கும் இவ்வீதிமட்டும் பாராகண்டிதமாக விடப்பட்டுக்கிடக்கும் காரணந்தான் யாதாகுமோ?

ஆறும்வெள்ளி:— வழமையிலும் பார்க்க இம்முறை பரப்புக்கடந்தான், திவ்வியகத்தர்கோவிலிலே ஆறும்வெள்ளி வைபவம் மிகவும் பக்தி அருட்சியாய் நடைபெறலாயிற்று. அடம்பன் கட்டளைக்குருவரின் அயராமுயற்சியால் யாத்திரிகர்கள் சகலசௌகரியங்களையும்பெற்று அமைதியாகத்தங்கி ஆன்மநலம் பெற்றுப்போனமை குறிப்பிடற்பாலது. ஒலிபரப்பிமூலம் செபமாலை, திருமணித்தியால ஆராதனை, அருட்சிக்குரியபிரசங்கம் நடைபெற்றமை பெரிதும்மகிழ்ச்சிக்குரியதாயிருந்தது. திருப்பாடுகளின் மூவிதகாட்சிகளும் கன்மனங்களையும் கசிந்துருகச் செய்துவிட்டன. மன்னார், மாதோட்டப்பகுதியில்உள்ள மாட்டுவண்டிகளெல்லாம் அங்கே குழுமிநின்றகாட்சியும் வெகுமாட்சியாயிருந்தது.

குட்டித்தவறணைகள்:—இப்பகுதியிலுள்ள பலகள்ளுத் தவறணைகள் [illegible] மக்களின் சம்மதி மூலம் நீக்கப்பட்டமை சகலரும்நன்கறிந்ததே. ஆனால், இப்போது அதே தவறணைகள் நிலைத்திருந்த இடங்களை எல்லாம் அனுமதிஇல்லாத குட்டித் தவறணைகள் ஆட்சிசெய்யத் தொடங்கிவிட்டன. முன்னர் தவறணைகளை நீக்கியஆசாமிகளே தற்போது இந்தக் குட்டித்தவறணைகளை ஆதரித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. சுபம்.

## பொதுவர்த்தமானம்

### கம்யூனிஸ்த திருவிளையாடல்

சென்னைநகரிலே பல்வேறுதொழிற் சங்கங்களின் சார்பாகச் சென்ற சித்திரைமாதம் 16-ந் திகதி நடைபெற்ற மாபெரும்கூட்டத்திலே திரு. சின்ன அண்ணாமலைஅவர்கள் பேசியபோது கூறியதுவருமாறு: "கம்யூனிஸ்தர்கள் லட்சக்கணக்கிலே மக்களைக் கொன்று குவித்து இரத்தவெள்ளத்திலே படகைவிட்டுச் செல்லுகிறார்கள், ஆயினும் தேர்தலின்போது பொய்ப்பிரசாரங்கள் செய்து மக்களை மயக்கிவிட்டார்கள். ஏழைகளின்நலனிலே அக்கறையுள்ளவர்கள்போல்நடித்து முதலைக்கண்ணீர் விடும் மஸ்கோதாசர்கள் தொழிலாளர்களைஏமாற்றிச் சுரண்டித் தங்கள்கட்சியைப்பலப்படுத்த முயலுகின்றார்கள். இவர்கள்ஏழைகளுக்காக உழைப்பவர்களாயின், பிச்சையெடுத்து நடைபாதையில்வாழுகிறவர்களின்சங்கத்தை நிறுவமுற்படுவதுதானே. அப்படிச் செய்யாமல், ஓர்அளவிற்கு ஊதியம் பெறும் தொழிலாளர்களிடம்மட்டும் போவானேன்? இவர்களிடம்தான் பணம்வசூலிக்கமுடியும். இதுதான் உண்மை."

### கம்யூனிஸமும் முஸ்லீம்களும்

இந்தியாவிலே ஆந்திர முஸ்லீம் கோஷ்டிஒன்று சென்றசித்திரைமாசம் 12-ந் திகதியன்று சென்னைக்கவர்னரைப் பேட்டிகண்டு பின்வருமாறு முறையீடுசெய்யலாயிற்று. ஆந்திர நாட்டில் 18 லட்சம் முஸ்லீம்மக்கள் இருக்கின்றார்கள். ஆனால், சென்னைச் சட்டசபைக்கு ஒரு முஸ்லீம்தானும் தெரிந்தெடுக்கப்படவில்லை. தெரிந்தெடுக்கப்பட்டவர்களில்ஒருவர் தான் முஸ்லீம்என்றும், ஆந்திர முஸ்லீம்களின் ஏகபிரதிநிதி தானே என்றும் சொல்லிக்கொண்டபோதிலும் உள்ளபடியே அவர் ஓர்கம்யூனிஸ்தர். இஸ்லாம்மதம் கம்யூனிஸத்தைப் பலமாகக் கண்டனம்பண்ணுகின்றது. ஆதலால் தன்னைஓர்கம்யூனிஸ்தரெனச் சொல்லிக்கொள்ளுபவன் அதேசமயத்தில் முஸ்லீமாகஇருத்தல்முடியாது. ஆதலால் ஆந்திரமுஸ்லீம்கள் ஆறுபேரைச் சென்னைச்சட்டசபைக்கு நியமிக்க வேண்டுமெனக் கவர்னர்அவர்களை இந்தமுஸ்லீம்கோஷ்டி கேட்டுக் கொள்ளலாயிற்று.

### கடல்நீர் குடிநீராகுமா?

கடல்நீரிலுள்ள உப்பை அகற்றிவிட்டு அதனைநல்ல குடிநீராக்கும் புதியமுறை ஒன்று அமெரிக்க ஐக்கியதேசத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகளின் கல்வி–கலாச்சாரஸ்தாபன விஞ்ஞான ஆசிரியர் திரு. மோறிஸ் கோள்ட் சிமித் எழுதுகின்றார். நிலக்கரி, தார், பெற்றோலிய ரசாயனப் பொருட்கள்கொண்டு ஓர்மெல்லியசவ்வு தயாரிக்கப்படுகின்றது. இந்தச்சவ்வின் கனம் ஒரு அங்குலத்திலே நாற்பதாயிரத்தில் ஒரு பங்காகும். இந்தச்சவ்வு வழியாகக் கடல்நீரைப்பாய்ச்சி மின்சாரத்தைப் பிரயோகித்து நல்லகுடிதண்ணீர் உற்பத்திசெய்யப்படுகிறது. இதன்மூலம் உப்புநீர் வேறாகவும், கடல்நீர் வேறாகவும் பிரிந்துவிடுகின்றன. உப்புநீரை மேலும் வடிகட்டி உப்பைப் பிரித்தெடுக்கலாம். அங்கே சிலபகுதிகளில் ஆயிரம்கலன் நல்லநீரைப் பிரித்தெடுக்க மூன்று அணாவே செலவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அன்பார்ந்த சகோதரங்களே !

இதோ வைகாசிமாதம் தொடங்கிவிட்டது. இது எங்கள் தேவதாயின் வணக்கமாதம். உலகம் எங்கும் இருக்கும் கிறீஸ்தவர்கள் இந்த வைகாசிமாதம் முழுவதையும் தேவதாயாருக்குத் தோத்திரமாகச் செலவழிப்பார்கள்.

நீங்கள் இந்த வணக்கமாதத்தை எப்படிக் கொண்டாடுவீர்கள்? பத்திச் சிறப்பாகத் தானே! உங்கள் கோவிலில் நடக்கும் வணக்கமாத ஆராதனையில் பூரணவிருப்பத்தோடு சேர்ந்து கொள்ளுங்கள். மாதாவின் பீடத்தை அலங்கரிப்பதில் ஆர்வங் கொள்ளுங்கள். கூட்டங் கூட்டமாகவோ, அன்றேல் வகுப்பு வகுப்பாகவோ இதைச்செய்யலாம். இந்தக்காலம் பசும் பூக்கள் நிறைந்த காலமாகையால், பசுமலர்பறித்து, பரிவுடன் மாலைகள் கோர்த்து, மாதாவின் மலர்ப்பதஞ் சூட்டுங்கள். உங்கள் நேசத்தைக் காட்டுங்கள்.

உலக சமாதானத்திற்காகவும், திருச்சபையின் சத்துராதிகள் அழியவும், மனிதர் எல்லோரும் சருவேசுரனை அண்டிச்சேரவும், விசேஷமாய் இலங்கைத் திருசசபையின் சேமம், அபிவிர்த்திக்காகவும், நமதுநாட்டில் நற்தலைவர்கள் தெரிந்துகொள்ளப்படவும் மன்றாடி வாருங்கள்.

உங்கள் அன்புள்ள

அண்ணா

## யாருக்காக மன்றாடுவது ?

ஏறத்தாழ 5,00,00,000 கத்தோலிக்கர் சோவியற் அரசாங்கத்தினதும் அதன் சகபாடிகளான சில ஐரோப்பிய நாடுகளினதும் கொடுங்கோலின்கீழ் அவலமாய் நசுக்குண்டு கிடக்கிறார்கள். அந்நாடுகளின் பெயர்களையும், சனத்தொகை, கத்தோலிக்கர் தொகையையும் தருகிறோம்.

| | | |
|---|---|---|
| போலாந்து | —2,30,77,000— | 2,10,00,000 |
| செக்கோசிலவாகியா | —1,24,63,000— | 86,00,000 |
| ஹங்கேரி | — 92,70,000— | 68,10,000 |
| ருமேனியா | —1,60,00,000— | 30,00,000 |
| யூகோசிலேவியா | —1,58,00,000— | 56,70,000 |
| பல்கேரியா | — 71,00,000— | 45,000 |
| அல்பேனியா | — 11,75,000— | 1,13,000 |

பால்திக்நாடுகளில் பத்துலட்சம் கத்தோலிக்கர். அன்றியும், கோறியாவிலும், சீனவிலும்உள்ள கத்தோலிக்கரும் வேதகலாபனையால் வாடுகிறார்கள். மேற்கூறிய இடங்களில்உள்ள கத்தோலிக்கர் விசுவாசத்தில் உறுதியாயிருக்கும்படி உருக்கமாய்ச் செபியுங்கள்.

## கண்ணாடி வைரம்

பார்சீக தேசத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் தன் பிரசைகள் தன்னைப்பற்றிக் கொண்டிருக்கும அபிப்பிராயம் என்னவென்று அறியவிரும்பினான். ஆனல், அவன்கேட்டால் யார் உண்மைசொல்லப்போகிறார்கள்? நன்குயோசித்துவிட்டு, வயோதிகனும், உண்மைசொல்லக் கூடியவனுமான எலாயிம் என்ற புலவனை அரசன் வரவழைத்தான். அத்துடன் தனது மந்திரிமாருள் பிரமாணிக்கமுள்ள ஒன்பதுபேரையும் அழைத்திருந்தான்.

புலவனும், மந்திரிமாரும் வந்தவுடன் அரசன் அவர்களைப் பார்த்து: "என்னைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? உண்மைசொல்லுகிறவர்களுக்கு வைரம் பதித்த ஒவ்வோர் மோதிரம் சன்மானமாகக் கொடுப்பேன் என்ருன்.

மந்திரிமார் எல்லோரும் "உம்மைப்போல் உலகில் ஒருவருமில்லை; உமது வீரத்துக்கு இணையில்லை; புத்திக்கு அளவு இல்லை; உமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை" என்று அண்டப்புளுகு ஆகாசப்புளுகாய் அடுக்கிக்கொண்டு போனர்கள். எலாயிம் வாய் திறக்கவில்லை. அரசன் தன் வாக்கின் படி "பளீர்" என்று பளிச்சிடும் வைரம்பதித்த ஒவ்வோர் மோதிரம் மந்திரிமார் ஒவ்வொருவருக்கும் கொடுத்து அனுப்பினான். புலவனைப் பார்த்து: "எலாயிம், நீ ஏன் பேசாமலிருக்கிறாய்? உனக்குச் சன்மானம்பெற விருப்பமில்லையா?" என்று கேட்டான்.

"அரசே! காக்காய்ப்பொன்னுக்கு மதிப்புண்டா? உண்மையை அறிந்துகொள்வது உண்மையாகவே கஷ்டம்" என்று எலாயிம் மறுமொழி சொன்னான். 'உண்மையைத்தான் அறிய விரும்புகிறேன்; அச்சமின்றிச் சொல்" என்று அரசன் கேட்டான். அதற்குப் புலவன்: "நீர் என்னுடைய அரசர்தான். ஆயினும் நீர் மனிதர். சருவேசுரனுக்கு ஊழியஞ் செய்து உமது பிரசைகளை அன்பாய் நடத்தவேண்டி அவரால் உண்டாக்கப்பட்டவர் என்றான்.

அதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சியுற்றான். ஆயினும் புலவனுக்கு வைரமோதிரம் கொடுத்தானில்லை. அவனைத் தன் சிநேகிதனுய்த் தன்னுடன் இருத்திக்கொண்டான்.

அடுத்தநாள் மந்திரிகளிடம் வைர மோதிரங்களைப்பற்றி விசாரித்தான். "தாங்கள் தந்ததைத் தலைமேற்போற்றினோம். ஆனல், அரசே! அவைகளை உமக்கு விற்ற வணிகர் உம்மை ஏமாற்றிபபோட்டார்கள். அவை வைரமல்ல, கண்ணாடிகள்" என்றார்கள்.

"அடமடையரே! இதுஎனக்குத் தெரியாமலில்லை. பொய்க்கும் புளுகுக்கும் சன்மானம் இதுதான்" என்றான் அரசன்.

## சின்ன யேசுவே

1

சின்ன யேசுவே!
சிறிய பாலனே!
உன் கருணையை
உணர்ந்து போற்றினோம்

2

உண்மைத் தெய்வமே!
உலக மீட்பரே!
விண்ணை விட்டிங்கு
வந்த வேந்தரே!

3

மனிதனுப் பிறந்து
மக்கட்காய் மரித்து
மனித குலத்தினை
மீட்டு வைத்தீரே

4

தெய்வம் என்றும்மை
தெரிந்து வாழ்த்தியே
மெய்யின்பம் காணச்
செய்வீ ரெம்மையே

—லீயோ பிரான்சீஸ் றிச்வே

## மனந்திரும்பிய பாதிரியார்

எப்பிஸ் கோப்பல் பிரிவினைச்சபைப் பாதிரியாராயிருந்த சாள்ஸ் கெடலண்ட் இப்பொழுது மனந்திரும்பிச் சிக்காகோநகர் கத்தோலிக்க ஆசனக்கோவிலைச் சேர்ந்திருக்கிறார். அவர் தம்முடைய மனந்திரும்புதலைப் பற்றிக் கூறுவதாவது: நான் மனந்திரும்புவதற்கு அடி அத்திவாரமான காரணம் கத்தோலிக்கரின் நன்முன்மாதிரிகையே. என் கத்தோலிக்க சிநேகிதர்களின் நடத்தையை அவதானித்தேன். அவர்கள் தங்கள் திருவேதத்தைப்பற்றிச் சந்தோஷம் நிறைந்தவர்களாய், வச்சிரத் தூண்போன்ற உறுதியான விசுவாசம் நிறைந்தவர்களாய்க் காணப்பட்டார்கள். தங்களையறியாமலே தங்கள் விசுவாசத்தைப் பிறருடன் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள்.

பிரிவினைச்சபை ஆலயங்கள் குளிர்ந்துபோய் வெறுமையாயிருப்பதற்கும்; கத்தோலிக்க கோவில்கள் கவர்ச்சிகரம்நிறைந்து சனந்தேங்கிப்போயிருப்பதற்கும் காரணமென்ன? நற்கருணைநாதரின் பிரசன்னமே என்கிறார் கெடலண்ட். சம்பேதுருவிடமிருந்து தத்துவம்பெற்ற மேற்றிராணிமாரால் முறையே அபிஷேகிக்கப்பெற்ற குருமாரிருப்பதுமே காரணமாகும்.

"நாங்கள் விசுவசிக்கவேண்டியதென்ன? என்று அநேகர் என்னைக் கேட்டபொழுது ஒரு மறுமொழியும் கொடுக்க முடியவில்லை. தன்னிஷ்டமானவிசுவாசத்தினுல் அவசியவிசுவாச சத்தியங்களைப்பற்றிக்கூட பிரிவினைச் சபையார் விவாதித்துக் கொள்ளுகிறார்கள். யேசுநாதர் சம்பேதுருவைத் தமது திருச்சபைக்குத் தலைமையாக்கியது அது அவசியமென்றல்லவா? தலையில்லா மனிதனுண்டா? தலைமையில்லாச் சபையுண்டா?

செபமாலையினுலேயே என்மனந்திரும்புதலின் வெற்றியையடைந்தேன். நான் மனந்திரும்புதற்குமுன் எட்டு மாதங்களாக செபமாலையை ஒதித் தியானிக்கப்பழகியது தற்செயலாய் நிகழ்ந்ததுஅல்ல. ஒவ்வொரு காரணிக்கமும் எனக்கு வழியைத் திறந்து, செல்ல வேண்டியபாதை ஒன்றேயென உறுதிப்படுத்தின. பரிதிமுன்பனிப்போல் தேவதாயாரின் அருளால் எனக்கிருந்த முட்டுக்கட்டைகளெல்லாம் நீங்கின.

## வடமாகாண அபேட்சகர்கள்

வடமாகாணத்தைச்சேர்ந்த ஒன்பது தொகுதிகளுக்கும் நியமனபத்திரங்கள் சமர்ப்பித்துள்ள அபேட்சகர்களின் நாமங்கள் வருமாறு :

### 1. யாழ்ப்பாணம்

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் (த. கா.)
டக்றர் ஈ. எம். வி. நாகநாதன் (த. அ.)
தேர்தல் திகதி — வைகாசி 28.

### 2. சாவகச்சேரி

திரு. வி. குமாரசாமி (த. கா.)
,, என். அருணசலம் (த. அ.)
தேர்தல் திகதி — வைகாசி 28.

### 3. காங்கேசன்துறை

திரு. எஸ். நடேசன் (யு. என். பி.)
,, எஸ். ஜே. வி. செல்வநாயகம் (த. அ.)
தேர்தல் திகதி — வைகாசி 30.

### 4. ஊர்காவற்றுறை

திரு. ஏ. எல். தம்பிஐயா (த. கா.)
,, சி. பாலசிங்கம் (சுயேச்சை)
,, எஸ். ஏ. தியாகராஜா (ல. ச. ச.)
,, வி. நவரத்தினம் (த. அ.)
,, எஸ். சேனுதிராசா (சுயேச்.)
தேர்தல் திகதி — வைகாசி 26.

### 5. கோப்பாய்

திரு. சின்னையா அருளம்பலம் (த. கா.)
,, குமாரசாமி வன்னியசிங்கம் (த. அ.)
,, ஆர். ஆர். தர்மரத்தினம் (ல. ச. ச.)
தேர்தல் திகதி — வைகாசி 28.

### 6. பருத்தித்துறை

திரு. ரி. இராமலிங்கம் (த. கா.)
,, பி. கந்தையா (கம். ல. ச. ச.)
,, சி. பாலசிங்கம் (ல. ச. ச.)
,, கே. கி. நடராஜா (சுயேச்சை)
தேர்தல் திகதி — வைகாசி 28.

### 7. வட்டுக்கோட்டை

திரு. கே. கனகரத்தினம் (த. கா.)
,, வி. வீரசிங்கம் (சுயேச்சை)
,, ஏ. வைத்தியலிங்கம் (கம்-ல. ச. ச.)
டக்றர் ஏ. அமிர்தலிங்கம் (த. அ)
திரு. சி. இரகுநாதன் (சுயேச்சை)
,, ரி. உருத்ரா (சுயேச்சை)
தேர்தல் திகதி — வைகாசி 30.

### 8. மன்னர்

திரு. சி. சிற்றம்பலம் (சுயேச்சை)
,, வி. ஏ. அழகக்கோன் (சுயேச்.)
தேர்தல் திகதி — வைகாசி 24.

### 9. வவுனியா

திரு. சி. சுந்தரலிங்கம் (சுயேச்சை)
,, எம். சி. வேலுப்பிள்ளை (சுயேச்சை)
,, ரி. எம். சபாரத்தினம் (த. கா)
,, யு. பி. தசனுயக (சுயேச்சை)
தேர்தல் திகதி — வைகாசி 30.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய அனுக்கிரகத்தினுலும் பரிசுத்த பாத்திமாதா, திருக்குடும்பத்தின் தலைவரான அர்ச். சூசையப்பர், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியாரின் சலுகையினுலும் எனக்கும், எனதுமகளுக்கும், புருஷனுக்கும் ஏற்பட்டகடும் வியாதிகளிலிருந்து குணப்படுத்தினதற்காக நேர்த்தியின்படி நன்றியறிதலுடன் இதைப் பிரசுரிக்கிறேன்.

மேலும்என்மகள் தெய்வபத்தியிலும் புண்ணியசாங்கோபாங்கத்திலும் வளரும்படியாகவும் எனதுகுடும்பத்திற்கு வேண்டியஉதவிகளைச் செய்யும்படியாகவும் யேசுவின் திரு இருதயத்தை இரந்து மன்றாடுகிறேன்.

ஆ. மரியம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொன்னவை சொன்னாற்போல

1. நான் நம்பினவனும் என்னோடு சமாதானமாயிருந்து வாழ்ந்தவனும் என் அப்பங்களைச் சாப்பிட்டவனுமான மனிதனே எனக்கு விரோதமாய்ப் பெருஞ்சதி செய்தான்.
தாவீது இராசா சங்கீதம் 40/8

2. அவர்களோ எனக்குக்கூலியாக முப்பது வெள்ளிநாணயங்களை நிறுத்தினர். சக்கரியாஸ்ஆகமம் 11/12

3. ஆயனை அடிக்க, ஆடுகள் சிதறுண்டு போவன.
சக்கரியாஸ்ஆகமம் 13/7

4. பொய்ச்சாட்சிகள் என்பேரில் எழும்பியிருக்கிறார்கள்; ஆனால் தோஷமானது தோஷத்தை வெல்லாது.
தாவீதுஇராசா சங்கீதம் 26/12

5. அவர் தானே இஷ்டப்பட்டு நிபேதனமாயினர்; ஆடானது தன்னைக் கழுத்தறுப்பான் முன்னும், செம்மறிக்குட்டி தன்மயிர் அறுப்பான் முன்னும் வாய்திறவாதிருப்பதுபோல, அவர் தம் கொலைஞர்முன் மௌனங்காத்தார்.
இசையாஸ்ஆகமம் 54/7

6. என்னைப் பாடுபடுத்துபவர்கட்கு என்தேகத்தைக் கையளித்தேன். என் தாடியைப் பிய்ப்பவர்கட்கு என் தாடியைக் காட்டினேன்; நிந்தை கூறுவோர்க்கும், காறி உமிழ்வோர்க்கும் என்முகத்தைத் திருப்பினேனில்லை.
இசையாஸ்ஆகமம் 50/6

7. தன்னை அடிக்கிறவனுக்குத் தனது கன்னத்தைக் காட்டுவான்; அவமானங்களால் பூரிக்கப்படுவான்.
எரேமியாஸ் புலம்பல் 3/30

8. என் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள்; என் எலும்புகளையெல்லாம் எண்ணினார்கள்.
தாவீதுஇராசா சங்கீதம் 21/16, 17

9. சண்டாளனாய் எண்ணப்பட்டதினாலும்........இசயாஸ்ஆகமம் 53/12

10. நான் மனுஷனல்ல, புழுவாயிருக்கிறேன்; நான் மனுஷர்களாலே நிந்திக்கப்பட்டு, சனங்களுக்கு அசங்கியப்பட்டவனுமா யிருக்கிறேன்; என்னைப் பார்க்கிறவர்களெல்லோரும் என்னைப் பரியாசம்பண்ணினார்கள்; என்னை இழிவாய்ப்பேசித் தலையை அசைத்து: கர்த்தர்பேரில் நம்பிக்கையா யிருந்தானே, அவர் அவனை விடுதலைசெய்யட்டும்; அவர் அவன்மேல் பிரியமாயிருப்பாரேயாகில் இப்போதவனை மீட்டுவிடட்டுமென்கிறார்கள்.
தாவீதுஇராசா சங்கீதம் 21/6-8

11. எனக்காக யாதொருவன் பரிதாபப்படுவான்என்று காத்துக்கொண்டிருந்தேன்; ஒருவருமில்லை. யாதொருவன் என்னைத் தேற்றுவான் என்று பார்த்தேன்; ஒருவரையுங் காணேன். என் ஆகாரத்திற்குப் பிச்சைக் கொடுத்தார்கள்; என் தாகத்திற்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள்.
தாவீதுஇராசாசங்கீதம் 68/21, 22

12. அவர்கள் என்னைநோக்கி உற்றுப்பார்த்தார்கள்; என்வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு என் அங்கியின்பேரிலே சீட்டுப்போட்டார்கள்.
தாவீதுஇராசா சங்கீதம் 21/17, 18

1. என்னோடுகூட அப்பஞ்சாப்பிடுகிறவன் எனக்குவிரோதமாய்த் தன் குதிக்காலைத் தூக்குவான்.
அரு. 13/18

நான் அப்பத்தைத் தோய்த்து யாருக்குக் கொடுக்கிறேனோ அவன் தான். அரு. 13/26

2. அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசு கொடுக்கும்படி தீர்த்தார்கள். மத். 26/15

3. அவர்களோ அவர்மேல் கை போட்டு அவரைப்பிடித்தார்கள். அவருடைய சீஷர்கள்எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.
மாற்கு 14/46, 50—மத். 26/56

4. அநேக பொய்ச்சாட்சிகள் வந்திருந்தும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சாட்சிகள் ஒன்றுக்கொன்று ஒவ்வாதிருந்தன.
மத். 26/60—மாற்கு 14/56

5. என்னைத் தேடுகிறீர்களானால், இவர்களைப் போகவிடுங்கள்.
அரு. 18/8

அவர் அவனுக்கு ஒரு பதிலுங் கூறவில்லை. லூக். 23/9—மத். 27/14

6. அவர்மேல்துப்பி, அந்தமூங்கில் தடியையும்வாங்கி, அவரைச் சிரசில் அடித்தார்கள். மத். 27/30

அவருடைய கண்களையும் கட்டி அவரை முகத்திலும்அறைந்து...தூஷணித்துக்கொண் டிருந்தார்கள்.
லூக். 22/64-65

7. வேறுசிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து... மத். 27/67

8. யேசுநாதரை நடுவிலுமாகச் சிலுவையில்அறைந்தார்கள்.
அரு. 19/18—மாற்கு 15/25

ஈட்டியினலே அவருடைய விலாவைக் குத்தித்திறந்தான்.
அரு. 19/34

9. இவன் குற்றவாளியல்லாதிருந்தால், இவனை உமக்குக் கையளிக்க மாட்டோம். அரு. 18/30

10. சர்வேசுரனை நம்பினனே, அவருக்குப் பிரியமானல் இப்போதே இவனைஇரட்சிக்கட்டும். மத். 27/43

அவ்வழியாய்ப் போனவர்கள் அவரைத் தூஷணித்துத் தங்கள் தலைகளை அசைத்து: ஆ! சர்வேசுரனுடைய ஆலயத்தை இடித்து மூன்றுநாளில் அதைத் திரும்பவும் கட்டுகிறவனே! உன்னைத்தானே இரட்சித்துக்கொள்.
மத். 27/39, 40

11. அப்போது அவருக்குப் பிச்சுக்கலந்த திராட்சரசத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள். மத். 27/34

கடற்காளானை எடுத்து அதைக் காடியில் நிறையத் தோய்த்து, ஒரு கோலின்மேலேற்றி, அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மத். 28/48

12. அவருடைய வஸ்திரங்களை எடுத்து ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொருபங்காக அவைகளை நாலுபங்கு போட்டார்கள். அரு. 19/23

இதைக் கிழியாமல் யாருக்குக் கிடைக்குமென்று இதன்மேல் சீட்டுப் போடுவோம்என்று பேசிக்கொண்டார்கள். அரு. 19/24

## சிரிப்பு என்பது ஓர் சிறந்த கலை

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மகிழ்ச்சிவழி:** சிரிப்பதால்நமக்கு இன்பம ஏற்படுகின்றது. சிலர் சொல்வர்: "இன்பம் இருந்தால்தான் சிரிப்பு வரும். ஆதலால் முதலில் இன்பம். அதன்பின் அதன்பயனாய்ச் சிரிப்பு." மெய்தான். ஆனால், நாம்கூறுவதும் சரியே. இன்பம் இல்லாதபோதுமுதலாய்ச் சிரித்து இன்பவுணர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளலாம். இன்பத்தின் அடிபற்றி, இன்பத்தின்பயனாய்ச் சிரிப்புவருவதுஇயல்பு. ஆனால், அதில் நமதுபிரயாசை ஒன்றுமில்லை. அதற்கு அவ்வளவுமதிப்பில்லை. மாறாக, இன்பமில்லாச்சமயத்தில் முகமலர்ந்து சிரிப்போமானால், நம்சிரிப்புக்கு ஒருதனிப் பெரும் மேன்மைஉண்டு. வெளிஆக்களிப்பால் உளம்உவக்கும். நம்உளம் மட்டுமல்ல, பிறர்மனமும்மகிழும். கவலைதீரும். சிரிப்புஇவ்வாறு மகிசவழியாகின்றது. அதற்கென்று சிரிக்கத்தகாத சிலவிசேஷித்தவேளைகளில் அக்களித்துச்சிரிப்பது முறையாகாது. எடுத்துக்காட்டாக, இல்லத்திலொருவர் இறந்துவிட்டால் அங்கு துக்கசூழ்நிலை நிலவுகின்றது. அத் துக்கச்சூழ்நிலையைக் குலைத்து, ஒருவர்சிரிக்க ஆரம்பித்தால் அனைவரும் அவரைப் 'பைத்தியகாரன்' என்றே அழைப்பர். எனவே, 'சிரிப்பு மகிழ்ச்சிவழி' எனக்கருதி, அதிக தூரம் சென்றுவிடக்கூடாது. எதிலும் மிதம்இருக்கவேண்டும்.

டி. எஸ். லூர்துசாமி

**சுகந்தரும் மருந்து:** சிரிப்பின் செல்வப்புதல்வன் மகிழ்ச்சியாகும். இம்மகிழ்ச்சி நமதுசுகநிலையைக் காக்கின்றது. காத்துவளர்க்கின்றது. அதாவது, சிரிப்பதால் உடல்பூரிக்கின்றது. ஏனெனில், உளத்திற்கும் உடலுக்கும் தொடர்புஉண்டு. உடல்பூரிப்பதால் உடல்நலம் ஏற்படுகின்றது. அதற்கு மாறாக, கவலையுள்ளவர்கள் தங்களது கவலையை வெளியேகவிடாமல் உள்ளேயே அடக்கிவைத்து மனங்குமுறுவார்களாயின் உளம்உருகிச் சோர்வறுவர். உள்ளத்தளர்ச்சியால் உடல் நலிந்து வியாதியில்விழுவர்.—மேலும் வயிறுகுலுங்கச்சிரித்தால், சீரணசக்தி மிகும். சீரணஅலுவலில் ஈடுபடும் உடலுறுப்புகள் சுருங்கிவிரிந்து, ஆடி அசையநேரும். அவ்வாறுஅவைகள் அசைவதால், சீரணவேலை மிகச்சுறுசுறுப்பாய், வெகுசொகுசாய் நடைபெறும். சிரிப்புச் சுகந்தரும்.

ஆகவே சிரிப்புஎன்பது மனிதஇலட்சணம், மகிழ்ச்சிவழி, சுகவழி. இது புனையல்ல, பொய்யல்ல; உண்மைத் தத்துவம், அனுபவசித்தாந்தம்.

2. **சிரிப்பின் சீர்கேடு:** இத்தகைய சீருஞ்சிறப்பும்வாய்ந்த சிரிப்பு சிலசமயங்களில் "குரங்குகையில் சிக்கியபூமாலை" போல் ஆகிவிடுகின்றது. மனிதத்தன்மையற்றோர் சிலரது கையில்சிக்கிச் சீர்குலைகின்றது. சீர்குலைந்து பரிகாசச்சிரிப்பாகவும், பசப்புச்சிரிப்பாகவும், அர்த்தமற்றசிரிப்பாகவும் பரிதாபக்காட்சியளிக்கின்றது.

**பரிகாசச் சிரிப்பு:** பிறரை அளவுமீறிப் பரிகசித்து, ஏளனம்செய்யச் சிரிப்புஎன்னும் நற்பூஷணம் துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்றது. உள்ளக் கொதிப்பை, பகைவெப்பத்தை, வஞ்சகசமாகியநஞ்சை வெளிக்கக்கும் கருவியாக மாறுகின்றது. சீர்மிக்கசிரிப்பு, அந்தோ! சீர்கெட்ட சிரிப்பாகிவிடுகின்றது.

**பசப்புச் சிரிப்பு:** இதனைப் 'பச்சைச்சிரிப்பு' எனவும் சொல்லலாம். மற்றவர்களைமயக்க, அவர்கள் தலையில் குல்லாப்போட, ஒருசிலர்இந்தச்சிரிப்பைக் கையாளுகின்றனர். அயலாரை இவ்வாறு பசப்புச்சிரிப்பால் வசப்படுத்துவது அற்பத்தனம். பிறரது அன்பை நேர்மையான நடத்தையால், இன்பவுணர்ச்சியால், ஈகைப்பெருக்கால், இன்னுசெய்யாமையால், அறிவுடைமையால், அடக்கவொடுக்கத்தால் அடைவதைவிட்டுவிட்டு, இக்கோணல் வழியில் ஏன் புகவேண்டும்?

**அர்த்தமற்ற சிரிப்பு:** நம்மனதில் இருக்கும்எண்ணங்களின் பிரதிபலிப்பாய் இருப்பதுதான் சிரிப்பின்சிறப்பாகும். அன்றி, வெறுமனே மனதில் ஒன்றுமின்றி, 'சும்மா' சிரிப்பது அர்த்தமற்றசிரிப்பு. சிலபூபதிகளுக்கு என்னசொன்னாலும் சிரிப்பு. எது செய்தாலும் சிரிப்பு. கண்டதற்கெல்லாம் சிரிப்பு. எடுத்ததற்கெல்லாம் சிரிப்பு. காரமற்றசிரிப்பு. சாரமற்ற சிரிப்பு. காரணமில்லாச்சிரிப்பு. சில வேளைகளில் இந்தஅர்த்தமற்றசிரிப்பு ஆபத்தானசிரிப்பாகவும் முடிவதுண்டு. "அடே, நீ இங்கிருந்தபணத்தை எடுத்தாயா?" "ஹி - ஹி நான் ஏன் அதைஎடுக்கிறேன்?" இச்சந்தர்ப்பத்தில், ஹி-ஹி என இளிப்பதில் அர்த்தமென்ன இருக்கிறது? அவன்உண்மையில் பணத்தைஎடுக்காவிடினும், எடுத்ததாக மற்றவர்கள் சமுசயப்படஏதுவாகிறது. அடி, உதை ஆரம்பமாகிறது. அர்த்தமற்றசிரிப்பு ஆபத்தானசிரிப்பாக முடிகின்றது.

அனைத்தையும் ஆக்கிய அன்புள்ள தேவன் மனிதருக்கு மகிழ்ந்துஅருளிய ஆபரணம் சிரிப்பு. அதனைப் பரிகாசச்சிரிப்பாகவும், பசப்புச் சிரிப்பாகவும், அர்த்தமற்றசிரிப்பாகவும் சீர்கெடச்செய்வது சரியல்ல. மனிதத்தன்மையின் மாண்பாகவும், மகிழ்ச்சிவழியாகவும், சுகந்தரும் மருந்தாகவும் சீரிய முறையில் பிரயோகிப்பதே சிரிப்பு.

முந்துங்கள்! முந்துங்கள்!!

உங்களின் பிரதிகளைப் பதிவுசெய்ய முந்துங்கள்!

சத்தியவேத பாதுகாவலன்
வாசகர்களுக்கு அரிய சந்தர்ப்பம்!

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் "தேன் ஒலி" என்ற கத்தோலிக்க மாதப் பத்திரிகையை இந்தியாவிலிருந்து வரவழைத்து அநேக வாசகர்களை வருட சந்தாதாராகச் சேர்த்துவருகின்றோம். ஆதலால் வாசகர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் பதிவுசெய்துகொள்ளவும்.

வருடசந்தா ரூபா 2-00
தனிப்பிரதி சதம் 15

விலாசம்:
Pressmasters (Catholic) Corporation,
50, Jampettah Street,
Colombo 13.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

வவுனியா இறம்பைக்குளத்தில், எழுந்தருளியிருக்கும் பரிசுத்தலூர்து மலைத்தாயாரின் இரக்கத்தையும், பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரினதும், இறம்பைக்குளப் பதிவைப்பதியரான கோடி அற்புதரினதும் மன்றாட்டையும், குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள், அர்ச். றீத்தம்மாள், அர்ச். பிலோமினம்மாள் முதலிய அர்ச்சியசிஷ்டர்களின் வேண்டுதலையும், தவறாமல்வேண்டிவந்தேன். காத்திராப்பிரகாரமாய் அற்புத சுகம் எனதுபிள்ளைக்கும், பேத்திக்கும் அருளப்பெற்றது.

லூர்துபதித்தாயாருக்கு அனவரதகாலம் ஸ்தோத்திரமும், ஸ்துதியும், வாழ்த்துதலுமுண்டாகக்கடவது. நன்றியறிதலான அற்பகாணிக்கையை ஏழைகளுக்காய் ஏற்றுக்கொள்ளவும். பூசைப்பலிஇங்கு ஒப்புக்கொடுக்கப்பெற்றது.

S. M. V.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 1-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org